மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 9 / செப்டம்பர் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-





## மரணப்படுக்கையில் அச்சு ஊடகங்கள்



## வேலைக்கான புதிய அனைத்திந்திய தேர்வு தமிழ்நாட்டு மாணவர்களை கழித்துக் கட்டும்!

# ஊரடங்கு தளர்வுகள்


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly September 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**தமிழரசு** மதுரை
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி
**ராஜா சாக்ரட்டீஸ்** தஞ்சை
**அ. இரா. முல்லைக்கோ** பெங்களூர்
நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

பிரதமர் கிசான் திட்டம்
- தலையங்கம்.......... 4

சட்டப்போராட்டத்தின் மூலம் உரிமை நிலை நிறுத்தப்பட்டுள்ளது.......... 5

நாடகக் கொட்டாய் முதல் சினிமாக் கொட்டாய் வரை (7)
- பூவை தயா.......... 7

பிரசாந்த் பூஷணுக்கு ஒரு ரூபாய் அபராதம்
- சைதை மணிமாறன்.......... 10

தமிழ்வேதம் கூறும் தமிழ் மருத்துவம்
ஆடாதொடை இலை மூலிகை.......... 11

தம்பியை எண்ணி
டாக்டர் ஷாலினி.......... 13

நீதிக் கட்சி ஆட்சியும் வகுப்பு வாரி
பிரதிநிதித்துவ ஆணையும்.......... 15

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் வாலிபர் கொலை அர்ச்சகர் கைது.......... 17

தனியார் மயமாக்கலே தலையாயக் கொள்கை
- அ.இரா. முல்லைக்கோ.......... 18

ஊரடங்கு தளர்வுகள்
- தமிழக முதலமைச்சர்.......... 20

இந்தி வெறியர் இராஜேஷ் கோட்சே.......... 23

மக்களுக்கு சேவை புரிந்த என் தாய் தேசத் துரோகியா?
தமிழில் : ம. சுசித்ரா.......... 24

மொழி ஓர் இனத்தின் அடையாளம்
- சீனி.மோகன்.......... 26

தமிழுக்கு என்னம்மா குறை (உண்மை நிகழ்வு)
- தமிழ்ப் பெண்..........28

போதிமரத்துப் புத்தனை விநாயகனாக்கியஆரிய வரலாற்று திருட்டுச் சூழ்ச்சி
- தோழர் சவீதா முனுசாமி.......... 29

மரணப்படுக்கையில் அச்சு ஊடகங்கள்
- முனைவர் சுட்டி இ.ஜே. சுந்தர்.......... 30

வேலைக்கான புதிய அனைத்திந்திய தேர்வு தமிழ்நாட்டு மாணவர்களை கழித்துக் கட்டும்
- பெ. மணியரசன்.......... 33

தமிழ்நாட்டு வேலைகள் தமிழர்களுக்கே
- ஒரு வாரம் தொடர் மறியல்.......... 34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.





# பிரதமர் கிசான் திட்டம்?

நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 6000 மூன்று தவணைகளில் மத்திய அரசு கொடுக்கும் திட்டமே கிசான் திட்டம். இத்தொகை ஒரு குடும்பத்தில் ஒருவருக்கே கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தில் சுமார் 110 கோடி அளவில தமிழகத்தில் ஊழல் நடந் திருப்பதாகவும் அந்த ஊழலில் ஈடுபட்ட 34 அதிகாரிகள் மீது ஒழுங்கு நட வடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

பயன்பெறும் விவசாயிகளின் விபரங்களை சில தனியார் கணினி மையங்கள் முறைகேடாகப் பெற்று, அதன் துணை கொண்டு மோசடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு அரசு அதிகாரிகள் துணைபோயிருக்கிறார்கள்.

பொதுமக்கள் பலரிடம், அரசால் கொரோனா நிதி தரப்பட இருக்கிறது என்று ஏமாற்றி, ஆதார் எண், ரூபாய் 500 வாங்கி இருக்கிறார்கள். ஆதார் விபரத்தைக் கொண்டு கிசான் திட்டத்தின் பயன்களை மடை மாற்றியிருக்கிறார்கள். இம்மோசடி சேலம், கடலூர், விழுப்புரம், திருவண்ணமலை, பெரம்பலூர் என்று தமிழகத்தின் பல மாவட்டங்களில் நடந்திருக்கிறது.

எக்காலத்திலும் துன்பப்படுகிற உழவர்களுக்கான உரிமைகள், பிறரால் வஞ்சிக்கப்படுவதை அரசுகள் கண்டும் காணதது போல் இருப்பது நல்லதல்ல. உரியவர்களுக்கு பயன்கள் சென்று சேர வேண்டும் என்ற எண்ணத்துடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

கடந்த ஆறு ஆண்டுகளாக வடநாட்டு பெரும் முதலாளிகள், ஊரப்புறங்களில் நிலங்களை ஏழை விவசாயிகளிடமிருந்து வாங்கி, அவர்களும் விவசாயிகள் என்ற போர்வையில் கிசான் பயன்களை அனுபவித்து வருகிறார்கள். இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களில் வடநாட்டு முதலைகள் வாங்கிய நிலங்கள் ஏராளம். இதையும் அரசு கண்டுபிடித்து, மோசடிக்காரர்களை கூண்டில் ஏற்ற வேண்டும். காலம் காலமாக தமிழ் மண்ணிலே பிறந்து, வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள் எந்நாளும் பிறருக்கு அடிமைகளாகி விடக்கூடாது.





சிற்றூர்களின் பணியாற்றும் மருத்துவர்களுக்கு மருத்துவ மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீடு அளிப்பது தொடர்பாக இந்திய மருத்துவக் கவுன்சில் (எம்.சி.ஐ) சில விதிமுறைகளை வகுத்தது. அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழ் நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் தாக்கல் செய்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு முக்கிய தீர்ப்பை வழங்கியது.

அந்தத் தீர்ப்பில், அரசால் சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்ட நிறுவனமான இந்திய மருத்துவ கவுன் சிலுக்கு இடஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் அதிகாரம் கிடையாது என்று கூறியது. இட ஒதுக்கீட்டில் மாநில அரசுக்கு இருக்கும் அதிகாரத்தில் எம்.சி.ஐ. தலையிட முடியாத நிலையை இந்த உத்தரவு ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இதுகுறித்து முதல்அமைச்சர் எடப்பாடு பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது :

முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பில், மாநிலதிற் கான 50 விழுக்காடு இடங்களில் உள் ஒதுக் கீடாக 50 விழுக்காடு இடங்களை தமிர்நாடு அரசில் பணியுரியும் மருத்துவர்களுக்கு வழங்மும் நடைமுறை பல காலமாக தமிழ் நாட்டில் இருந்து வந்தது.

இந்த நடைமுறையைப் பாதிக்கும் விதத்தில், இந்திய மருத்துவக் குழுமம் (எம்.சி.ஐ) முதுநிலை மருத்துவக் கல்வி ஒழுங்கு முறைகளை வெளியிட்டது. இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் வழக்குத் தொடர்ந்தது.

அந்த வழக்கில், தமிழ்நாடு அரசு, இந்த வழக்கை ஆதரித்து மூத்த வக்கீல்களை நியமித்து, முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பில் தமிழ்நாட்டில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள உள் ஒதுக்கீட்டு முறையே தொடர வேண்டும் என்று ஆணித்தரமாக வாதாடியது. இவ்வழக்கில், இந்த ஆகஸ்டு 31ஆம் நாளன்று சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்புரையில், “மாநில அரசுகள் மருத்துவர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவது, முதுநிலை மருத்துவக் கல்வி ஒழுங்கு முறைகளுக்கு எதிரானது அல்ல. எனவே அரசு மருத்துவர்களுக்கு மாநில அரசுகள், முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பில் உள் ஒதுக்கீடு வழங்கலாம்’’ என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை வழங்கியது.

ஊரகப் பகுதி மக்களுக்கும், மலைவாழ் மக்களுக் கும், ஏழைஎளிய மக்களுக்கும் மருத்துவ சேவையாற்று கிற தமிழக அரசு, மருத்துவர்களுக்கு முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பில் வழங்கப்பட்டு வந்த உள் ஒதுக்கீட்டை பாதுகாக்கும் வகையில், சுப்ரீம் கோர்ட் டில் சட்டப்போராட்டம் மூலம், உரிமையை நிலை நிறுத்தியது தமிழக அரசுதான் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.






# சட்டப்போராட்டத்தின் மூலம் உரிமை நிலை நிறுத்தப்பட்டுள்ளது

## இரத்தக் கண்ணீர் நாடகத்தில் ஒரு காட்சி!



எம். ஆர். ராதா அவர்கள் ஆற்றங்கரையோரம் நடந்து செல்வார். அப்பொழுது ஒரு பாமரன், இறந்து போன அவனது தந்தைக்கு தர்ப்பணம் கொடுத்துக் கொண்டிருப்பார். அருகில் ஒரு பிராமணன் மந்திரம் ஓதிக் கொண்டு இருப்பார். அருகாமையில் காய்கறிகள், அரிசி பருப்பு முதலியவை இருக்கும். இதுதான் காட்சி. அப்பொழுது நடப்பவைகள் உரையாடலாக :

ராதா : ஏம்பா என்னடா பண்ணிக்கிட்டு இருக்கீங்க?

பாமரன் : என் தந்தைக்கு காரியம் செய்து கொண்டு இருக்கிறேன்.

ராதா : அதுக்கு எதுக்குடா இந்த குடுமி வச்ச ஆளு? அப்புறம் இந்த காய், கறி, அரிசி, பருப்பு?

பாமரன் : இவருக்குக் கொடுத்தா அது என் அப்பாவுக்குக் கொடுத்த மாதிரி. அதான் அவருக்கு கொடுக்க வச்சிருக்கேன்.

ராதா : உன் அப்பா எப்படி இறந்தார்?

பாமரன் : மஞ்சள் காமாலை வந்து இறந்தார்.

ராதா: ஏன் வைத்தியம் பாக்கலையா?

பாமரன்: வைத்தியம் பாக்கணும்னு நெனச்சேன். அதுக்குள்ள இறந்து போய் விட்டார்.

ராதா : என்ன வைத்தியம் பார்க்க நினைத்தாய்?

பாமரன்: பழுக்கக் காய்ச்சிய கம்பியால் காலில் சூடு போட்டால் மஞ்சள் காமாலை சரி ஆகிவிடும். ஆனால் அதைச் செய்வதற்குள் அவர் இறந்து விட்டார்.

ராதா: அப்போ உங்க அப்பன், மேல இன்னும் மஞ்சள் காமாலையோடுதான் இருக்கார்?

பாமரன் : ஆமாம்

ராதா : அப்போ ஒன்னு செய். எப்படி இந்தக் காய் கறியெல்லாம் இவனுக்குக் கொடுத்தா உங்க அப்பனுக்குப் போய்ச் சேருமோ, அதே போல, இவனுக்கு காலில் சூடு வை. உங்க அப்பனுக்கு மஞ்சள் காமாலை சரி ஆயிடும்.

## தனித்திரு! விழித்திரு! வீட்டிலிரு!

**ஊ**ரைச் சுற்றி
உலகம் சுற்றி
அங்கே சுற்றி
இங்கே சுற்றி
இன்று...
நம் வீட்டிற்குள் கொரோனா...
பேரிடர் தொற்றாக
வீரியத்துடன்!

'தீதும் நன்றும் பிறர் தர வாரா'
என்பதைப் போல்...
தேசாந்திர பயணம்
வந்த கொரோனாவை,
நாமாக வரவேற்று
பலியிட்டு விட்டோம்
பல்லுயிர்களை!

சமூக இடைவெளியை
மறந்தோம்,
முகக் கவசம் அணிவதை
மறந்தோம்,
கைகளை சுத்தம் செய்வதை
மறந்தோம்!

தனிமைப் படுத்திக்
கொள்வதை மறந்தோம்!
வீட்டில் இருக்க வேண்டியதை
மறந்தோம் கூடவே
விழிப்புணர்வையும்
மறந்தோம்!

எல்லாம் நம் தவறுதானென்று
புரிந்து கொண்டோம்!
கொடிய கொரோனாவை
கழுவேற்ற...
இனியாவது
ஏற்போம் உறுதி மொழி...
அரசாணைக்குக் கட்டுப்பட்டு!

**– பூவைதயா –**



# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

# 7



## "ஜேம்ஸ்பாண்ட்007 "

### பூவை தயா

'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்' என்று நீண்ட காலமாய் ஒரு சொல் வழக்கில் உண்டு.

*மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர் நீப்பர் மானம் வரின்*
*என்றார் வள்ளுவனார்.*

ஆக அவர் 'கவரிமா' என்றுதான் சொல்லியுள் ளாரே தவிர, கவரிமான் என்று சொல்லவில்லை. 'கவரிமா' மான் இனத்தைச் சார்ந்தவையல்ல, எருமை மாட்டைச் சார்ந்த ஒருவகை பிராணியாகும். இந்தக் கவரிமா குளிர்பிரதேசமான இமயமலைப் பகுதிகளிலே அதிகமாய் காணமுடியுமாம். அதன் ரோமங்கள் அடர்த்தியாக இருக்குமாம். அவற்றை எவரேனும் பிடுங்கினாலோ அல்லது நோய்வாய்ப்பட்ட சமயத்தில் அந்த ரோமங்கள் உதிர்ந்தாலோ அவை குளிர்தாங்க இயலாமல் இறந்துவிடுமாம்... இதுதான் உண்மையான தகவல்.

"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி தண் நிழல் பிணியோடு வதியும் வடதிசையதுவே வான்நோய் இமயம் என்று, புறநானூற்றிலும் இதுபற்றிய ஒரு குறிப்பு உண்டு என்பதை ஒரு அறிஞரின் நூல் படித்து அறிந்தேன். அஃது போன்றே கஸ்தூரிமான் என்று ஒன்று இல்லையென்றும், பாலையும் தண்ணீரையும் இனம் பிரிக்கும் ஆற்றலைப் பெற்றது அன்னப்பறவை என்பது தவறான கூற்றென்றும் ஆய்வாளர்களும் அறிஞர் பெருமக்களும் அழகாக எடுத்துரைத்திருக் கின்றனர். இன்னும் நாம் அறிய வேண்டிய உண்மைகள் நிறைய உண்டு.

*எந்த ஒரு பொய்யையும்*
*அழகாகவும் அழுத்தமாகவும்*
*ஆழமாகவும் சொல்லும் போது*
*அது உயிர் பெற்றுவிடுகிறது நம்*
*நெஞ்சில் நிலை பெற்று விடுகிறது!*

என்ற என் கவிதைக்கு உயிர்கொடுத்த, கதையாக வடித்து பல பொய்யுரைகளை தோலுரித்துக் காட்டு வோம் நாடகம் மூலம் என்ற எனது எண்ணத்தை, சற்று தள்ளிவைத்தேன். நகைச்சுவையை பிரதானமாக வைத்து ஒரு கதை என் மனதில் ஓடிக் கொண்டிருந்தது அதை முதலில் எழுதுவோம் என்று எழுத ஆரம்பித்தேன்.

நாடகத்திற்கான பெயர் ஜேம்ஸ்பாண்ட் 007. இந்த நாடகத்தில் பல புதுமைகளைப் புகுத்தினேன். நாயகர்கள் இருவரும் அண்ணன்தம்பி. திருமணமா னவர்கள் இவர்கள் பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்சி கடத்தி வருகிறார்கள் மனைவிமார்களுக்கு மிகவும் பயந்தவர்கள்.

இன்னொரு பக்கம் ஒரு கொள்ளைக்கூட்ட ஸ்தாபனம் பூஜை போட்டு ஆரம்பிப்பார்கள். கொள்ளையன் பைரவன் இரக்க குணமுடையவன். பல பணக்கார வீடுகளுக்குள் கொள்ளை அடிக்கச் சென்று, அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு அவர்களுக்கே இவன் உதவி செய்து விட்டு வருவான். "பாக்க பணக்காரனா இருக்க அத்தனை பேரும் பாவஜென் மங்களடா!" என்று தன் அடியாளிடம் சொல்லி வருந்துவான். இவனின் குணம் அறிந்து, ஜேம்ஸ் பாண்ட் இருவரும் வந்து சந்தித்து... தத்தம் மனைவி யிடமிருந்து சுதந்திரம் பெற்றுத்தர வேண்டுவார்கள். கொள்ளையனும் அவர்கள் விசயத்தில் தலையிட்டு பிரச்சினையை தீர்த்து வைப்பான். இதுவே சதையின் சாராம்சம்.

சிலர் கதை எழுதுகிறார்கள். சிலர் கதைகளாகவே ஆகிறார்கள் வாழ்க்கையே கதைதான். வாழ்வில் தங்கள் அனுபவத்தை சொல்ல முடியாத நேரம், அவைகள் கதைகளாக உருப்பெறுகின்றன. இந்தக் கதையும் அப்படி உருவானதுதான். 1983 இல் தி.நகர் வாணிமகாலில் நாடகம் அரங்கேறியது. கூட்டம் நிறைந்தே இருந்தது. நாடகத்தைப் பார்த்தவர்கள்

என்னை மனமார பாராட்டினார்கள். வாரப் பத்திரிகையாளர்கள் நாடகத்தைப் பற்றி விமர்சனம் எழுதியிருந்தனர். அதில் ஒரு பத்திரிகையில்... தயாவின் நடிப்பைவிட தம்பியாக நடித்த பாபுவின் நடிப்பு மிகச்சிறப்பு என்று கூறியிருந்தனர். அது உண்மையும் கூட. காரணம், நானே பாபுவின் நடிப்பிற்கு ஒரு ரசிகனாவேன். ஆயினும் எனது நடிப்பை மேலும் வளர்த்துக்கொள்ள பயிற்சி எடுத்துக் கொண்டேன். கொஞ்சம் தேர்ச்சியும் பெற்றேன்.

மேலும் இந்நாடகம் பற்றிய மற்றொரு பத்திரிக்கையின் விமர்சனத்தில் கொள்ளையன் ரஹீம், அடியாள்பீடாக்கடை ராஜா அப்பாவாக நடித்த நவாப்ஜான், நடிகைகள் வரிசையில் நாமக்கல் புஷ்பா, திலகவதி மற்றும் அனைத்துக் கலைஞர்களையும் வாழ்த்தியிருந்தனர். அதுமட்டுமின்றி எனது வசனங்களைக் குறிப்பிட்டு எழுதி, 'பூவைதயாவின் வசனங்கள் புதுமையும் கருத்தும் நகைச்சுவையும் ஒன்றுகூடி ஜொலிக்கின்றன' என்று முடித்திருந் தார்கள்.

அரங்கேற்றம் முடிந்த சில வாரங்களிலே, இரண்டாம் முறையாக நடிகர் சங்கத்தில் மேடை யேறியது. நான் எனது எதார்த்த நடிப்பை வெளிப் படுத்தினேன். அனைவரும் பாராட்டினார்கள். ஆக எனது கடின முயற்சிக்கு வெற்றி கிடைத்தது. அதை இன்று வரை தக்க வைத்துக் கொண்டிருக் கிறேன்.

நான் எழுதிய நான்கு நாடகங்களிலேயே இந்த நாடகம் பலமுறை மேடையேறியது. பல்வேறு நாடகக் கலைஞர்கள் என்னைச் சந்தித்து, அவர்கள் பகுதியிலே நடத்திட அனுமதி பெற்று 'ஸ்கிரிப்டை' வாங்கிச் சென்றார்கள். இவர்களில் மிகச்சிறந்த சமூக நாடக ஆசிரியராக திகழும் அன்பு நண்பர் பூவைமணி. தனது நண்பர் ஐசிஎப் மோகனுக்காக ஸ்கிரிப்டை வாங்கி னார். ஐ.சி.எப்.அம்பேத்கர் அரங்கில் நண்பருடன் இணைந்து சிறப்புடன் மேடையேற்றி னார். நண்பர் பூவைமணி, எழுத்தாளர் பூவை.எஸ். ஆறுமுகம் அவர்களின் புதல்வர் என்பது குறிப்பிடத் தக்கது.

அவரைத் தொடர்ந்து தினமணி பத்திரிகையில் பணியாற்றிய புங்க கௌரிநாதனும் எண்ணூர் அனல் மின் நிலைய மனமகிழ் மன்றத்தின் சார்பாக அனல் மின் நிலைய குடியிருப்புப் பகுதியில் நடத்திடவும் பெற்றச் சென்று மேடையேற்றினார்கள். ஆண்டு தோறும் மே திங்களில் நாடகம் நடத்தும் எண்ணூர் அனல் மின் நிலைய நண்பர்கள் எனது அப்பாவின் நாடகங்களையும் எனது நாடகங்களையும் மட்டுமே நடத்தவர்கள் என்பது சிறப்புச் செய்தி. இதற்கடுத்து ஆவடி பீரங்கி தொழிற்சாலையில் பணிபுரியும் அன்பிற்கினிய அண்ணன் ஜி.அழகிரி அவர்களும் ஜேம்ஸ் பாண்ட் 007 நாடகத்தை பீரங்கி தொழிற் சாலை மனமகிழ் மன்றத்தின் சார்பாக மேடை யேற்றினார் அங்கே என்னை பலரும் சூழ்ந்து கொண்டு பாராட்டியதை இன்று வரை நான் மறவேன்.

தொடர்ந்து இந்நாடகம் பலகோயில் திருவிழாக் களில் நடந்தேறியது. ஒருமுறை இராயப் பேட்டை வி.எம்.தெருவில் உள்ள அம்மன் கோவிலில் நாடகம் நடத்திட மதுரை கண்ணன் ஏற்பாடு செய்திருந்தார். என்னுடன் நடித்த பாபு வேலை காரணமாக வெளிநாடு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்ததால் இந்த கோவில் நாடகத்தில் எனக்கு இணையாக தம்பியாக, நண்பர் மதுரை கண்ணன் இணைந்தார்.

இரவு மணி பதினொன்று, கலைஞர்கள் யாவரும் ஒப்பனை முடித்துக் காத்திருக்கிறோம் மேடையைத் தான் காணவில்லை. நான் மதுரை கண்ணனிடம் "மணி பதினொன்று ஆச்சு, எப்படி மேடைபோட்டு எப்ப நடிக்கிறது?" ன்னு கேட்டுக் கொண்டிருந்த சமயம், அங்கே மூன்று மாட்டுவண்டி வந்து நின்றது. மாட்டை அவிழ்த்து மூன்று வண்டிகளையும் வரிசைப்படுத்தி நிறுத்தியவுடன், கம்புகட்டி படுதாக்கள் கட்டப்பட்டு லைட்'டும் போடப்பட்டது. சரியாக பன்னிரெண்டு மணிக்கு நாடகம் துவங்கியது. ஆடிமாத திருவிழா என்பதால் மக்கள் யாவரும் கலகலப்பாகவும் சலசலப்பாகவும் பேசிக்கொண்டே நாடகம் பார்த் தார்கள். இன்னும் நாடகம் முடிய ஐந்து காட்சிகளே இருந்தன. நான் என் காட்சியை முடித்து பின்பக்கம் சென்றேன்...

மூன்று மாட்டு வண்டியில் ஒன்றைக்காணோம். நண்பரிடம் கேட்டேன்' என்னாச்சு ஒரு வண்டியைக் காணோம். வண்டி இருக்கும்ங்கிற நினைப்புல ஆர்ட்டிஸ்ட் கீழ விழுந்துட மாட்டாங்களா?" என்றதும் "தயா, அந்த வண்டி கொத்தவால் சாவடிக்கு போயிருச்சு. நாம இதுலயே அட்ஜெஸ்ட் பண்ணி நாடகத்தை முடிச்சுடுவோம்" என்றார். எப்படியோ ஒரு வழியாக நாடகம் சிறப்பாக நடந்து முடிந்தது. என்ன ஒன்று... பார்த்த மக்கள்தான் கழுத்து வலியோடு வீடு சென்றிருப்பார்கள். காரணம் பொதுவான மேடையை விட மாட்டுவண்டி கொஞ்சம் உயரம்.

மதுரை கண்ணனைப் பற்றிய ஒரு செய்தி. அவர் எனது குடும்ப நண்பர், என் மீது எல்லா வகையிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். "புதிது புதிதாக எழுதுங்கள் தயா, நாம் நாடகம் நடத்திக் கொண்டே யிருப்போம்" என்று, இன்றுவரை எனக்கு ஊக்க மளித்துக் கொண்டிருப்பவர். பொதுவாக எனக்கு எல்லோரும் நண்பர்கள்தான். கலைத்துறையிலும் சரி, வெளியிடத்திலும் சரி எனக்குப் பிடிக்காதவர்கள், வேண்டாதவர்கள் என்று இதுவரை யாருமேயில்லை. என் போன்ற என் நண்பர்களும் அப்படித்தான் என்னை எண்ணுகிறார்கள். ஒருவருக் குத் திருமணமாகி 40 ஆண்டுகள் இருக்கலாம் என்று வைத்துக் கொள்வோம், அவர் எத்தனை ஆண்டுகள் தன் மனைவியிடம் சலிப்பின்றி இன்முக மாய் பேசியி ருப்பார், எத்தனைமுறை கலந்தாலோசித்து தன் மனைவிக்கு பெருமையைச் சேர்த்திருப்பார்? என்ற கேள்வியை அவரின்முன் வைத்தால் தயங்கியபடியே தான் பதில் வரும். அதே நேரம் 40 ஆண்டுகால நண்பர்களிடம் நாம் ஒவ்வொரு வரும் அன்று போல்

இன்றுவரை இனிதாக பேசுவதுமாய் கலந்தாலோசிப்பதுமாய் இருக்கிறோம்.

ஆக, தாய்க்குப்பின் தாரம் என்றாலும்... அதையும் கடந்து நல் இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பது நட்பு ஒன்றே ஆகும்... ஆயினும் அந்த நட்பு இன்றைய கால சூழ்நிலைக்கு ஒத்துப் போகாமலும், பொய்யும் புரட்டும் கலந்து ஆரோக்கியம் குன்றியே காணப்படுவதாய் எனக்குள் ஒரு ஐயமும் ஏற்படுகிறது,

காலச் சக்கரத்தின் ஓட்டத்தில் இவ்வாறு நடப்பதும் ஒரு நாகரிகம் என்று ஆகிவிடுமோ?

**பயணம் தொடரும்...**

## பழ நெடுமாறன் வேண்டுகோள்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் நாகரிகத் தொன்மையை எடுத்துக்காட்டும் அரியபொருட்களும் தமிழ் கீறல்களைக் கொண்ட மட்பாண்டங் களும் தொல்லியல் ஆய்வு களின் மூலம் கிடைத்த அழகன் குளம், சங்க காலத்தில் சிறந்திருந்த வணிக நகர மாகும்.



எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி போன்ற நாடு களுடன் தமிழர்கள் வாணிபம் நடத்திய தற் கானச் சான்றாதாரங் களும் இங்கு கிடைத் துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்திருக்கும் இவ்வூரில் 1990ஆம் ஆண்டு முதல் அகழாய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதைச் சுற்றிலும் உள்ள பல இடங்களிலும் அகழாய்வு நடைபெற உள்ளது.

தமிழரின் தொன்மை நாகரிகத்தின் அடையாள மாகத் திகழும் அழகன் குளத்தின் அருகே இந்திய அரசின் நிறுவனமான ஓ.என்.ஜி.சி. மீத்தேன் எரிவாயு எடுப்பதற்காக ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்டும் பணியினைத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக பழந்தமிழரின் தொல்லியல் சான்றுகள் அழியும் நிலை உருவாகியுள்ளது.

மேலும் இதையொட்டி அமைந்துள்ள கடற்கரைக் கிராமங்களில் வாழும் மீனவர்களின் வாழ்வாதாரமும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் எனவே இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த முன்வருமாறு தமிழக அரசை வற்புறுத்துகிறேன்.

அன்புள்ள,

**பழ. நெடுமாறன்,**

தலைவர், தமிழர் தேசிய முன்னணி



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடி 6-ம் கட்ட அகழாய்வு பணியை தொல்லியல்துறை ஆணையர் உதயச்சந்திரன் ஆய்வு செய்தார்.

திருப்புவனம் அருகே கீழடியில் 110 ஏக்கரில் தொல்லியல் மேடு அமைந்துள்ளது. இங்கு 2014-ம் ஆண்டு முதல் அகழாய்வு பணி நடந்து வருகிறது. ஏற்கெனவே மூன்று கட்ட அகழாய்வை மத்திய தொல்லியல்துறையும், 4 மற்றும் 5-ம் கட்ட அகழாய்வை தமிழக தொல்லியல்துறையும் நடத்தின.

தற்போது 6-ம் கட்ட அகழாய்வு நடந்து வருகிறது.

இதுவரை 6-ம் கட்ட அகழாய்வில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அகழாய்வு பணி செப்.30-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் கீழடி, அகரம், மணலூர், கொந்தகை ஆகிய 4 இடங்களில் நடக்கும் அகழாய்வு பணிகளை தொல்லியல் துறை ஆணையர் உதயச்சந்திரன் பார்வையிட்டார்.

கொந்தகையில் முதுமக்கள்தாழி, மனித எலும்புகளை பார்வையிட்டு விபரங்களை கேட்டறிந்தார். அகழாய்வு பணிகளின் நிலை குறித்து இணை இயக்குநர் சிவானந்தம் விளக்கினார்.

தொடர்ந்து கொந்தகையில் நடந்து வரும் கீழடி அகழ் வைப்பகம் அமைக்கும் பணியையும் இயக்குநர் பார்வையிட்டர். அப்போது பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினர்.

இதுவரை செங்கல் கட்டுமானம், மனித எலும்புகள், விலங்கு எலும்புகள், பானைகள், ஓடுகள், பாசிகள் என 14,535 தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன. இந்த அகழாய்வு மூலம் கீழடி நகர நாகரீகம் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என தெரியவந்தது.

இதையடுத்து தொல்பொருட்களை பொதுமக்கள், மாணவர்கள் காணும் வகையில் கீழடி அருகே கொந்தகையில் 2 ஏக்கரில் உலகத்தரம் வாய்ந்த அகழ் வைப்பகம் அமைக்க ரூ.12.21 கோடி ஒதுக்கப்பட்டது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி போப்டே, உச்ச நீதிமன்ற செயல்பாடுகளை விமர்சித்து, சமூக செயற்பாட்டாளரும் மூத்த வழக்கறிஞருமான பிரசாந்த பூஷண் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் சில கருத்துகளை வெளியிட்டார். இது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனக் கூறி அவர் மீது உச்சநிதிமன்றம் தானாக முன்வந்து வழக்கு பதிவு செய்தது. இந்த வழக்கில் பிரசாந்த் பூஷண் குற்றவாளி என கடந்த 14ஆம் நாள் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இந்த வழக்கு மீண்டும் கடந்த 20ஆம் நாள் விசாரணைக்கு வந்போது தன்னுடைய கருத்துகளுக்கு மன்னிப்புக் கேட்க முடியாது என்று கூறி பிரசாந்த் பூஷண் உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார். பின்னர் பிரசாந்த் பூஷண் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலும் அவர் மன்னிப்புக் கோருவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது அட்டர்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால் தனிப்பட்ட முறையில் ஆஜராகி, "பிரசாந்த் பூஷண் கருத்துகள் ஒரு வேளை அவதூறாக இருக்கும் பட்சத்தில் அவரை எச்சரித்து விட வேண்டுமே தவிர அவருக்கு தண்டனை எதையும் வழங்கக்கூடாது. அவரை நீதிமன்றம் மன்னிக்க வேண்டும். இந்த விவகாரத்தை சுப்ரீம் கோர்ட்டு கருணையுடன் அணுக வேண்டும். அவ்வாறு செய்தால் உச்ச நீதிமன்றத்தின் நன்மதிப்பு பலமடங்கு உயரும்" என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு நீதிபதி அருண் மிஸ்ரா, "பிரசாந்த் பூஷண் தன்னுடைய தவறை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர் மன்னிப்புக் கடிதம் எதையும் கொடுக்கவும் இல்லை. அவருடைய கூடுதல் மனுவிலும் மன்னிப்புக் கோர மாட்டேன் என்று கூறியிருப்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்று தெரிவித்தார்.

இதற்குப் பதில் அளித்த வேணுகோபால், அவருடைய கருத்தை மறுபரிசிலனை செய்வதற்கு மேலும் ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், இந்த வழக்கில் காலம் இன்னும் கடந்து விடவில்லை என்றும் கூறினார். இதைத் தொடர்ந்து நீதிபதி அருண் மிஸ்ரா, பிரசாந்த் பூஷணுக்கு மேலும் 30 நிமிடங்கள் கால அவகாசம் வழங்கினார். ஆனால், 30 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் நீதிமன்றம் கூடியபோதும் பிரசாந்த் பூஷண், தன்னுடைய கருத்தில் தான் மிகவும் உறுதியுடன் இருப்பதாகவும், மன்னிப்பு கோரப் போவது இல்லை என்றும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, இந்த வழக்கில் தீர்ப்பு நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிபதிகள் அருண் மிஸ்ரா, பி.ஆர். கவாய், கிருஷ்ண முராரி ஆகியோர் அடங்கிய காணொலி அமர்வில் 31 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. "இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளிக்கு மன்னிப்புக் கோருவதற்கு அவகாசம் வழங்கப்பட்டது. வருத்தம் தெரிவிக்குமாறு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். தன்னுடைய அறிக்கைக்கு ஊடகங்களில் வெகுவாக விளம்பரம் கொடுத்தார். இது குறித்து பேட்டிகளும் அளித்தார். இது நீதிமன்றத்தின் மாண்பை மேலும் சீர்குலைப்பதாக அமைந்தது. எனவே, அவருக்கு ரூ.1 அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகையை அவர், வருகிற 15ஆம் நாளுக்குள் செலுத்தவில்லை என்றால், அவர் 3 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். மேலும் 3 ஆண்டுகள் அவர் வழக்குகளில் வாதாட தடை விதிக்கப்படும். என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

**– சைதை மணிமாறன்**



# பிரசாந்த் பூஷணுக்கு ஒரு ரூபாய் அபராதம்!

# தமிழ்வேதம் கூறும் தமிழ் மருத்துவம் ஆடாதொடை இலை மூலிகை

நுரையீரல் தொடர்பான நோய்கள் அனைத்தையும் நீக்கும் ஆடாதொடை. தொண்டையில் ஏற்படும் கிருமித் தொற்றை தடுக்கும் ஆடாதொடை மூலிகை. குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் சளித்தொல்லையை நீக்கும்.

ஆடாதொடை தென்னிந்தியாவில் பல இடங்களில் காணப்படும் மூலிகையாகும். ஆடாதொடை சிறு செடியாகவும், ஒரு சில இடங்களில் மரமாகவும் காணப்படும். இதன் இலை மாமர இலை வடிவில் இருக்கும். ஆடுகள் தொடாத இலை என்பதால் இது 'ஆடா தொடா' என மருவி பெயர் பெற்றுள்ளது.

ஆடாதொடை அதிகளவு கரியமில வாயுவை உள்வாங்கி, பிராண வாயுவை வெளியிடுகிறது. இது அதிகளவு ஆக்ஸிசனை வெளியிடுவதால் இதனை ஆயுள் மூலிகை என்ற அழைக்கின்றனர். இதன் வேர், பட்டை, பூ, இலை அனைத்தும் மருத்துவத்தன்மை கொண்டது.

தற்போது இருக்கும் சூழ்நிலையில் மனிதனை அன்றாடம் துரத்தும் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இது அருமருந்தாகும்.

எந்த வகையான மண்ணாக இருந்தாலும் இந்த ஆடாதொடை செழித்து வளரும் தன்மை கொண்டது.

நெஞ்சில் சளி, அதனுடன் வலி, உடலில் தசைப் பகுதிகளில் வலி போன்றவற்றிற்கு ஆடாதொடை இலையைப் பறித்து காயவைத்து பொடியாக்கி கசாயம் செய்து கொடுப்பார்கள். இது சிறந்த நிவாரணியாக பயன்படுகிறது.

மனித உடலில் நுரையீரல் முக்கிய உறுப்பாகும். இது சுவாசக் காற்றை உள்வாங்கி அதிலுள்ள பிராண வாயுவைப் பிரித்து எடுத்துக் கொண்டு கரியமில வாயுவை வெளியேற்றுகிறது. நுரையீரல் நன்கு செயல் பட்டால் தான் இரத்தம் சுத்தமடையும். இதனால் நீண்ட ஆயுளும் கிடைக்கும். இத்தகைய சிறப்பு





வாய்ந்த நுரையீரலைப் பலப்படுத்த ஆடாதொடை சிறந்த மருந்தாக உள்ளது.

இது நுரையீரல் காற்றுச் சிற்றறைகளில் உள்ள அசடுகளை (சளி) நீக்கி ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

ஆடாதொடை இலை, தூதுவளை இலை சம அளவு எடுத்து காயவைத்து பொடியாக்கி வைத்தக் கொண்டு, தினமும் காலை, மாலை வேளைகளில் ஒரு சிட்டிகை தேனுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் நுரையீரல் சம்பந்தமான நோய்கள் அனைத்தும் நீங்கும். சளித் தொல்லை அணுகாது. நுரையீரல் பலம்பெறும்.

நாளங்களில் உள்ள சளியை நீக்கி ரத்தத்தைச் சுத்தப்படுத்தும். ரத்தத்தில் உள்ள தேவையற்ற உப்பு, கொழுப்பு போன்றவற்றை மாற்றும் தன்மை ஆடா தொடைக்கு உண்டு.

ஆடாதொடை இலையை நிழலில் உலர்த்திப் பொடித்து வைத்து தினமும் காலை வேளையில் 1/4 ஸ்பூன் அளவு எடுத்து, தேனில் குழைத்து, குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் குழந்தைகளுக்கு உண்டாகும் சளி, இருமல், இரைப்பு நீங்கும்.

நெஞ்சுச் சளியைப் போக்கி உடலை சீரான நிலையில் வைத்துக் கொள்ளும். இதில் பச்சயம் அதிகமாக இருப்பதால் நெஞ்சுச்சளி, இருமல் போன்றவற்றை உடனே மாற்றும். குத்து இருமல், தொண்டைக்கட்டு போன்றவை நீங்கும்.

ஆடாதொடைப் பன்ன மையறுக்கும் வாதமுதற்
கோடாகோ டிச்சுரத்தின் கோதொழிக்கும் நாடின
மிகுத்தெ முந்தசன்னி பதின்மூன்றும் விலக்கும்
அகத்துநோய் போக்கு மறி.

என்று அகத்திய மாமுனியால் போற்றப்பட்ட ஆடாதொடை செடி ஒரு அரிய வகை மூலிகையாகும். Adhatoda vasica என்பது இதன் தாவரவியல் பெயராக அறியப்படுகிறது. இச்செடியின் வேறு பெயர் வாசை. இச்செடியின் இலை, பூ, வேர், பட்டை என அனைத்துப் பாகங்களும் மருந்தாகப் பயன்படுகிறது. எளிதான வீட்டு மருத்துவமாக இந்த மூலிகையைப் பயன்படுத்தலாம். சித்த மருத்துவத்தில் ஆடாதொடைச் செடியின் இலைகளை அதிகம் பயன்படுத்துவார்கள்.

ஆடாதொடையின் சிறப்பு, நன்கு பாடக்கூடிய குரல் வளத்தை வழங்கக் கூடியது ஆடாதொடை இலை. ஆடாதொடையின் குணத்தை உரைக்க, ஆடாதொடைக்குப் பாடாத நாவும் பாடும் என்ற சித்தர் வரிகளால் அறியலாம். பாடும் குழந்தை களுக்கோ, பாடகர்களுக்கோ குரல் கம்மல் இருக்கக் கூடாது. தொண்டைக் கட்டாமல் இருக்க அவர்கள் பயிற்சி மற்றும் உணவுக்கட்டுப்பாடு மேற்கொள் வார்கள்.

ஆடாதொடையை கசாயமாகவோ, சிரப் ஆகவோ சேர்த்துக் கொண்டால் நல்ல குரல் வளம் பெறுவ தோடு, தங்கள் தொண்டையை கிருமித் தொற்று ஏற்படாமல் காத்துக் கொள்ளலாம்.

**ஆடா தொடை இலையைப் பயன்படுத்தும் முறை :**

ஆடாதொடை குடிநீர். குடிநீர் என்றால் குடிக்கும் மருந்து நீர் அதாவது நாம் கசாயம் என்று சொல்வதன் தூய தமிழ்ப் பெயர். இந்தக் குடிநீர் தயாரித்து அருந்தி வர தொண்டைக் கட்டு, தொண்டை தொற்று நீங்கி விடும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் சளித் தொல்லைகள் நீங்க :

ஆடாதொடை இலைகளை உலர்த்திப் பொடி யாக்கி, தினமும் தேனில் கலந்து குழந்தைகளைப் பருக வைத்துவர, குழந்தைகளை அதிகம் பாதிக்கும் இரைப்பு, சளி, இருமல் தொல்லைகள் போகும். ஆடாதொடை இலைகளில் உள்ள உயிர்ச்சத்தான பச்சையம் குழந்தைகளின் நெஞ்சில் உள்ள சளியைக் கரைத்து, நீடித்த இருமல் தொண்டைக்கட்டு போன்ற பாதிப்புகளை சரிசெய்து, குழந்தைகளின் உடல்நலனை மேம்படுத்தும்.

இந்த மருந்தை, ஒரு மண்டலம் எனும் அளவு அதாவது, நாற்பத்தெட்டு நாட்கள் தினமும் ஒரு சிட்டிகை விடாமல் குழந்தைகள் பருகிவரச் செய்தால், குழந்தைகளுக்கு எப்போதும், இருமல், சளி போன்ற சுவாசப் பாதிப்புகள் அணுகாது.

குழந்தைகளுக்கு நெஞ்சுச் சளியால் ஏற்படும் இரைப்பை உடனே சரிசெய்ய, ஆடாதொடை இலைகளை மையாக அரைத்து, குழந்தைகளின் நெஞ்சில் தடவிவர, நெஞ்சுச் சளி உடனே கரைந்து, சுவாசம் சீராகும். தற்போது நாட்டு மருந்துக் கடைகளில் 'ஆடா தொடை இலை சூரணம்' விற்கப் படுகிறது. சூரணத்தையும் வாங்கிப் பயன்படுத்தலாம்.

குறிப்பு : அளவுகளை சித்த மருத்துவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வது சிறந்தது. ●

# தம்பியை எண்ணி...

தம்பி அண்ணாமலை ஐ.பி.எஸ்ஸைப் பார்க்கும் போது, என் பள்ளிக்காலத்தை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

என் பள்ளிக்கூடம் இந்திய கலாச்சாரத்தை மொத்த மாக கரைத்து, நேரடியாக எங்கள் மூளைக்குள் டவுன் லோடு செய்யும்.

வெள்ளிக்கிழமை என்றால் ஸ்கூல் அசெம்பிளியில் எனக்கு மயக்கமே வந்துவிடும்... அத்தனை பக்திப் பாடல்கள், எல்லாமே சமஸ்கிருதத்தில். ஏதாவது ஒரு பண்டிகையோ, தேசிய தினமோ வந்து விட்டால், ராஜ்குமார் பாரதி, வில்லுப்பாட்டு சுப்பு ஆறுமுகம் என்று யாராவது வந்து தேசபக்தி நிகழ்ச்சி நடத்து வார்கள்.

அப்புறம் விஷ்வ இந்து பரிஷத் வந்து எங்களுக்கு ராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் இண்டர் ஸ்கூல் போட்டி எல்லாம் வைத்தார்கள். பக்த துருவ மார்கண்டேயா, என்று ஒரு முழு நீள சமஸ்கிருத படத்திற்கு நாங்கள் வீடு வீடாய்ப் போய் டிக்கெட் விற்றோம்.

ஆர் எஸ் எஸ் எங்கள் பள்ளிக்கு வந்து, எங்களுக்கு ஆடல், பாடல், யோகா எல்லாம் சொல்லிக் கொடுத் தார்கள்.

'சந்தனம் எங்கள் நாட்டின் புழுதி
கிராமம் அனைத்தும் தவ பூமி
சிறுமியர் எல்லாம் தேவியின் வடிவம்
சிறுவர் அனைவரும் ராமனே...'

என்றெல்லாம் நாங்கள் கொயர் பாடுவோம்.

அதன் பிறகு என்னை ஒரு ஸ்டேட் போர்ட் பள்ளிக்கு என் அம்மா மாற்றிவிட்டார்கள். அது வரை வரலாறு படிப்பேன், தமிழ் படிப்பேன், இயற்கை விவசாயம் செய்வேன், ஆயுர்வேதம் படிப்பேன், துறவி ஆகப் போகிறேன்... என்றெல்லாம் பலவாக கனவுலகில் வாழ்ந்த என்னை, அம்மா செண்டிமெண்ட் எனும் ஒற்றை மாயவிசையை வைத்து 180 டிகிரி திருப்பி, சயின்ஸ் படிக்க வைத்தார் என் அம்மா.

என் அம்மா ஒரு இயல்பான, யதார்த்தவாதி. தத்துவம், வியாக்கியானம், சித்தாந்தம் எல்லாம் அவருக்குப் பிடிக்காது. மிகவும் நேரடியாக யோசிப்பார். அதற்கும் மேல் ஏதாவது பேசினால், "டோண்ட் டாக் வீண் டாக்" என்பார்.

அவர் ஒரு கிறித்தவ காண்வெண்ட்டில் படித்தவர். என் கொள்ளுப் பாட்டி, என் பாட்டி, என் அம்மா மூவருமே அதே காண்வெண்டில் படித்தவர்கள். பக்கத்து வீட்டு மேரியம்மா, எதிர் வீட்டு பாஷா டாக்டர், அடுத்த வீட்டு சிங்கு, அடுத்த தெரு ஆங்கிலோ இந்தியன், எங்கள் விட்டில் குடியிருந்த ஐயர் எல்லோருமே என் அம்மாவுக்கு ஒன்றுதான். இன்னசெண்ட் காஸ்மோபாலிட்டன் multicultural லேடி என் அம்மா.




**டாக்டர் ஷாலினி**

அவரிடம் போய் "சந்தனம் எங்கள் நாட்டின் புழுதி" என்றால், "உளறாம போய்ப் படி. டோண்ட் டாக் வீண் டாக்" தான்.

ஆர்.எஸ்.எஸ். மாதிரியான ஒரு மிகப்பெரிய அமைப்பின் மூளைச் சலவையை வெறும் தன் common sense சால், தனி ஒரு மனுசியாய் அவரால் முறியடிக்க முடிந்தது.

என் அம்மாவின் அந்த விடா முயற்சியும் வழி காட்டுதலும் இல்லாவிட்டால் சங்கி ஆகிவிடும் அனைத்து மூளை வேலைப்பாடும் செய்யப்பட்டவள் தான் நானும்.

என் அம்மா விவரமாய் இருந்தார்கள். என் மூளையை மீட்டு, என்னை அறிவியல் பக்கம் திருப்பினார்கள்.

பாவம் அண்ணாமலை சாரின் அம்மாவிற்கு அது சாத்தியப்படவில்லை போலும்.

எந்த குழந்தையும் களிமண் தான்,
அது சங்கி ஆவதும், சாமர்த்தியம் ஆவதும்
அன்னை வளர்ப்பதிலே!

எப்பேற்பட்ட படுகுழியில் இருந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறார் என் அம்மா என்பது, மிஸ்டர் அண்ணாமலையைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு உரைக்கிறது.

My darling அம்மா நீங்க எப்பேற்பட்ட தெய்வம்!...

டாக்டர் **ஷாலினி**

## காலம்

நன்றாகவே இருந்தது நாடு
வேண்டாதது நடந்தது பாரு
நடக்கக் காலில்லை
கும்பிடக் கைகளில்லை
உரிமைப் போர்தனிலே
உதிரங்கள் சிந்தின வீதியிலே
நன்றாகவே இருந்தது நாடு
வேண்டாதது நடந்தது பாரு

செழிப்புதான் என்றும் தமிழீழம்
சிதைத்தது தீவை பெரும்பான்மை
நாங்கள் வாழ்ந்தோம் நலமோடு ஒரு காலம்
நாங்களும் வாழ வேண்டும் இக்காலம்

மண்பற்றே எங்கள் தன்மானம்
மரணங்கள் தந்தது பெரும்பாடம்
உண்டு உறங்கி எழுந்தோம் ஒரு காலம்
உறுப்புகள் இழந்து வெம்புகிறேம் இக்காலம்.

**இருங்கோவேள்**

# அயர்லாந்தில் தமிழ்த்தாய் கல்வித் திட்டம்!



மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், அயர்லாந்து தமிழ் அமைப்புகள் சார்பில், அயர்லாந்து தமிழரும் தமிழும் என்ற இணையவழி ஆய்வரங்கம் நடை பெற்றது. அதில் அயர்லாந்தில் தமிழர் விழாக்கள் சமூக ஒருங்கிணைவு என்ற தலைப்பில் அயர்லாந்து தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த ராஜேஷ் பெரிய கருப்பன் பேசியது:

அயர்லாந்து தமிழ்ச் சங்கம் மூலமாக ஆண்டு தோறும் கோடைவிழா என்ற பெயரில் தமிழரின் ஒன்று கூடல் நகிழ்வு நடத்தப்பட்டு வருகிறது. நிகழாண்டில் பொது முடக்கம் காரணமாக சூம் செயலி வழியே கோடை விழா கொண்டாடப் பட்டது. மேலும், தமிழ் மொழியைத் தக்க வைக்கும் நோக்கில் தமிழ்த்தாய் கல்வித் திட்டத்தில் மழலையர் வகுப்புகளில் தேர்ச்சி பெறும் குழந்தை களுக்கும், தன்னார்வ ஆசிரியர்களுக்கும் விருதுகள் வழங்கி வருகிறோம் என்றார்.

கமலக்கண்ணன் பேசுகையில், அயர்லாந்தில் தமிழரின் பண்பாடு, பாரம்பரியத்தை தக்கவைக்க 'நண்பேன்டா' என்ற அமைப்பு மூலம் கடந்த எட்டு ஆண்டுகளாக ஊர்த்திருவிழா நடத்தி வருகிறோம். அதில் பாரம்பரிய முறைப்படி வாழை மரம், வெற்றிலை, பூ இவையெல்லாம் இடம்பெற வேண்டும் என்பதற்காக, இங்கிலாந்தில் இருந்து வாங்கி வந்து விழாவை நடத்தி வருகிறோம் என்றார்.

மலேசியத் தமிழ எழுத்தாளர் சங்கத் தலைவர் பெ. இராஜேந்திரான், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நாகை.சுகுமாறன், சிங்கப்பூரைச் சேர்ந்த ஆ.ரா.சிவ குமாரன், உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் ப.அன்புச்செழியன் மற்றும் சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, துபை நாடுகளிலிருந்து 75 பேர் இந்த ஆய்வரங்கில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வை உலகத்தமிழ்ச்சங்கத்தின் ஆய்வு வளமையர் ஜ.ஜான்சிராணி, கணினி செயல்முறை யாளர் பெ.செல்வராணி உள்ளிட்டோர் ஒருங்கி ணைத்தனர்.

# நீதிக்கட்சி ஆட்சியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணையும்!

நீதிக் கட்சி உருவாவதற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு வழிகாட்டியது முஸ்லிம் லீக் என 1937 நவம்பர் 28 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நன்றி கூறியவர் தந்தை பெரியார்.

அரசு பதவிகளிலும், உயர் கல்வியிலும் ஒரு சமூகத்தின் ஆதிக்கம் மட்டுமே தலைதூக்கியிருந்த காரணத்தால் அதைத் தடுப்பதற்கான முயற்சி தொடங்கியது.

சென்னை வழக்கறிஞர்கள் புருசோத்தம நாயுடு, சுப்ரமணியம் போன்றோர் 1909இல் பார்ப்பனரல் லாதார் சங்கத்தைத் துவக்கினர்.

1912ஆம் ஆண்டு பார்ப்பனரல்லாத அரசு ஊழியர்கள், சென்னை ஐக்கிய சங்கத்தைத் துவக்கினர். இது 1913 ல் திராவிடச் சங்கமாக ஆனது.

1916 நவம்பர் 20ல் சென்னை வேப்பேரியில் சர். பிட்டி தியாகராய செட்டியார், டாக்டர் டி.எம்.நாயர், டாக்டர் சி. நடேச முதலியார் உள்ளிட்ட பெருமக்கள் ஒன்றுகூடி, தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தை அமைத்தனர்.

பார்ப்பனரல்லாதார் என பெயரிட்டு அழைக்க விரும்பாமல் திராவிடர் என அழைத்தார் டாக்டர் சி.நடேச முதலியார்.

1916 டிசம்பர் 20 அன்று சர். பிட்டி தியாகராயர் ‘பார்ப்பனரல்லாதார் கொள்கை’ அறிக்கையை வெளியிட்டார்.

இந்த இயக்கத்திற்காக ஜஸ்டிஸ், திராவிடன், ஆந்திர பிரகாசிகா பத்திரிகைகள் தொடங்கப்பட்டன. பத்திரிகை பெயராலேயே ‘ஜஸ்டிஸ் பார்ட்டி’ நீதிக்கட்சி என இது அழைக்கப்படலாயிற்று.



சென்னை மாகாணத்தில் 1920 டிசம்பர் 17 முதல் 1937 ஜூலை 14 வரை நீதிக்கட்சி முதல்வர்கள் பதவி வகித்துள்ளனர்.

நீதிக்கட்சியின் ஆட்சியில் 'வகுப்புவாரி பிரதி நிதித்துவ அரசாணை' ஜி.ஓ.எண்.613,1921ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் நாள் வெளியிடப்பட்டது. அதன் பின்னர், 1923 பிப்ரவரி 15லும், 1924 பிப்ரவரி 6 லும் வகுப்புரிமை ஆணைகள் வெளியிடப்பட்டன.

ஆனால், எந்த ஒரு ஆணையையும் செயல்படுத்த, அன்றைய பிராமண அதிகாரிகள் இடம் கொடுக்கவே இல்லை. அத்தோடு 1926 தேர்தலில் தென்னிந்தியர் நல உரிமை சங்க வேட்பாளர்களை பிராமணர்கள் தோற்கடித்தனர்.

காங்கிரசின் சுயராஜ்ய கட்சி வேட்பாளர்களும் சுயேச்சை வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர். இதனால் சுயேச்சைகள் ஆதரவில் டாக்டர் பி. சுப்பராயன் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த அமைச்சரவையில் அமைச்சராக இருந்த எஸ்.முத்தையா முதலியாரால்தான் 1927 நவம்பர் நான்காம் நாள் அரசாணை எம்.எஸ்.நெம்பர் 1071 வெளியிடப்பட்டது. 1937 ஜூலை 14 வரை நீதிக்கட்சி ஆட்சியில் இருந்ததால் வகுப்புவாரி உரிமை செயல் படுத்தப்பட்டது.

இதனால் அரசு பதவிகளில் முற்றிலுமாக ஆக்கிர மித்திருந்த பிராமணர்கள் ஆதிக்கம் குறைந்து கொண்டே வந்தது. அதேசமயம் அந்த இடத்தை பிராமணர் அல்லாத மற்ற முற்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களே நிரப்பி வந்தனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இன்னொரு கசப்பான உண்மை என்னவெனில் 1920 முதல் 1937 வரை உள்ள 12 ஆண்டு நீதிக்கட்சி ஆட்சியில் 5 முதல்வர்கள் பதவி வகித்தனர். ஆனால், இவர்கள் எவர் ஒருவரின் ஆட்சியிலும் ஒரு முஸ்லிம் கூட நியமிக்கப்படவில்லை.

01.04.1937 முதல் பொதுத் தேர்தலுக்குப் பின் இடைக்கால அமைச்சரவை கே.பி.ரெட்டி நாயுடு தலைமையில் பொறுப்பேற்றபோது கலீபுல்லா சாகிபும், 14.07.1937இல் ராசாசி அமைச்சரவையில் யாக்கூப் அசன் சேட்டும் பொதுப்பணித்துறை அமைச் சர்களாக பொறுப்பு வகித்தனர்.

1931 செப்டம்பர் 7 முதல் டிசம்பர் 1 வரை இரண் டாவது வட்ட மேசை மாநாடு லண்டனில் நடை பெற்றபோது, இந்தியாவின் வருங்கால சட்ட அமைப் பும் சிறுபான்மையினரின் வகுப்புவாரி பிரதி நிதித் தவமும் தான் பிரதானமாக விவாதிக்கப் பட்டன. இது காங்கிரஸ் தலைவர்கள் சிலரால் கடுமையாக எதிர்க்கப் பட்டது.

டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதி கோரினார். காந்தி இதை கடுமையாக எதிர்த்தார். வகுப்புவாரி பிரதிநிதித்தவ கோரிக்கையின் கருத்து வேறுபாட்டால், சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு பற்றி பிரட்டீசு அரசே முடிவு செய்யும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி 1932 ஆகஸ்ட் 17 அன்று பிரிட்டீசுப் பிரதமர் ராம்சே மாக் டொனால்டு 'கம்யூனல் அவார்டு' என்ற வகுப்புவாரித் தீர்வை அறிவித்தார்.

1934ஆம் ஆண்டு வெள்ளையர் அரசு மத்தியிலும், மாகாணங்களிலும் சிறுபான்மையினருக்கு எண்ணிக் கையின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்தது.

உள்துறை அமைச்சகத்தின் எஃப்.14/17பி/33.4.7.1934 ஆம் நாளைய ஆணையின்படி முசுலீம்களுக்கு 25 விழுக்காடு இடஒதுக்கீடும், ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறித்தவர், சீக்கியர், பார்சி ஆகிய 4 பிரிவி னருக்கும் சேர்த்து 8.50 விழுக்காடு இடஒதுக்கீடும் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சென்னை மாகாணத்தில் மத்திய அரசுத் துறைகளில் இடஒதுக்கீடு கோரிக் கையை தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தினர் முன் வைத்தனர்.

இக்கோரிக்கையின் பலனாக 1935 மார்ச் 15ஆம் நாள் வெளியான அரசாணையின் மூலம் 'சென்னை மாகாண பார்ப்பனர் அல்லாதாருக்கான இடஒதுக்கீடு' அறிவிக்கப்பட்டு 1936இல் நடைமுறைக் வந்தது.

மிகப்பெரிய முயற்சிக்குப் பின் கிடைக்கப்பெற்ற இந்த இடஒதுக்கீடுகள் எல்லாம் 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியா சுதந்திரமடைந்த நாளிலிருந்து 45 நாட் களுக்குள் ரத்து செய்யப்பட்டன.

அதே சமயம் 1943ஆகஸ்ட் 11ல் வழங்கப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்கான 8.50 விழுக்காடு இத ஒதுக்கீடு இந்திய விடுதலைக்குப்பின் 1947 செப்டம்பர் 12ல் 12.5 விழுக்காடாக உயர்த்தித் தரப்பட்டது. ●


## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ. 15,000/- (முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**





## கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் வாலிபர் கொலை அர்ச்சகர் கைது!

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வி.ஆண்டிக் குப்பத்தைச் சேர்ந்தவர் மஞ்சுளா, இவருக்கு திருமண மாகி 3 குழந்தைகள் உள்ளனர். கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மஞ்சுளா தனியாக வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் மஞ்சுளா வுக்கும் பண்ருட்டியில் உள்ள மளிகைக் கடையில் வேலை பார்த்து வந்த பணிக்கன் குப்பத்தைச் சேர்ந்த கண்ணதாசன் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது.

இருவரும் திருமணம் செய்து கொள்ளாமலேயே ஆண்டிக்குப்பத்தில் குடும்பம் நடத்தி வந்தனர். இந்த நிலையில் கடந்த 12ஆம் நாள் கடைக்கு வேலைக்குச் சென்ற கண்ணதாசன், மீண்டும் வீடு திரும்பவில்லை. இதுகுறித்து மஞ்சுளா கொடுத்த புகாரின் பேரில் பண்ருட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. மஞ்சுளா, அதே ஊரில் உள்ள வேணுகோபாலசாமி கோவிலில் அர்ச்சகரும் பிரபல ஜோதிடருமான கோபிநாத் என்பவரது வீட்டில் வேலை பார்த்து வந்தார். மஞ்சுளா வேலை முடித்து வீட்டுக்கு வந்த பிறகும், கோபி நாத்துடன் அடிக்கடி செல்போனில் பேசியுள்ளார். அதை கண்ணதாசன் கண்டித்துள்ளார். இருப்பினும் மஞ்சுளா கேட்காமல் கோபிநாத்துடன் செல்போனில் பேசுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்.

இதனால், மஞ்சுளாவுக்கும் கோபிநாத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என்று அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த கண்ணதாசன் கோபிநாத்தின் வீட்டுக்குச் சென்று, அவரையும் அவரது குடும்பத்தினரையும் திட்டியதாகத் தெரிகிறது. இதனால் கண்ணதாசனைத் தீர்த்துக் கட்ட மஞ்சுளா வும் கோபிநாத்தும் முடிவு செய்தனர். அதன்படி கடந்த 12ஆம் நாள் கண்ணதாசனை சமாதானப்படுத்துவற் காக கோபிநாத் அவரை வேணுகோபலசாமி கோவிலுக்கு அழைத்து வந்தார். அப்போது அங்கிருந்த மஞ்சுளா மற்றும் சிலர் சேர்ந்து இரும்புக் கம்பியால் கண்ணதாசனை சரமாரியாக அடித்துக் கொலை செய்தனர். பின்னர் கோவிலில் பூஜைப் பொருட்கள் வைக்கப்படும் அறையில் பள்ளம் தோண்டி, கண்ணதாசனின் உடலைப் புதைத்தனர். தன்மீது யாருக்கும் சந்தேகம் வந்து விடக்கூடாது என்பதற்காக மஞ்சுளா போலீசில் புகார் செய்து நாடகமாடியுள்ளார்.

இதையடுத்து மஞ்சுளா, கோபிநாத் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் இந்தக் கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய சிலரை போலீ சார் தேடி வருகின்றனர். இதற்கிடையே வேணுகோபா லசாமி கோவில் பூஜை பொருட்கள் அறையில் புதைக் கப்பட்டிருந்த கண்ணதாசனின் உடல், தாசில்தார் உதயகுமார் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டது. பின்னர் அவரது உடல், பிரேத பரிசோதனைக்காக விழுப்புரம் முண்டியம் பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி யிருக்கிறது.

# தனியார் மயமாக்கலே
# தலையாயக் கொள்கை!




“தனியுடைமைக் கொடுமைதனைத்
　　தகர்த்தெறிந்து தமைக்கொடுத்த
பொதுவுடைமை நிலைஉயரப்
　　புதுவழிகள் படிப்பித்த
மார்க்சு போல் இலெனின் போல்
　　மண் மைந்தன் சீவா போல்
மாண்புறத் திகழ்ந்திடுவீர்
　　மண்ணுரிமை காத்திடுவீர்!“

பகுத்தறிவு பொதுவுடைமைப் பாவலர் உடுமலை நாராயண கவியின் வளமான வைர வரிகளைப் பாருங்கள். தனியுடைமை நீக்கி பொதுவுடைமை காணும் நல் நெறிக்கு இதுவே அரிய சான்று. “இருக்கிற தெல்லாம் பொதுவாப் போனா எடுக்கிற நோக்கம் இருக்காது” இதுவும் ஒரு கொள்கை விளக்கமே. இதையே ஆட்சியாளர்களும் மக்களும் கருத்தாய்க் கொள்ள வேண்டும்.

இந்திய ஒன்றியத்தை ஆளும் அதிகார பாசிச வர்க்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணம் புதுப்புது சிக்கலை வழங்குவதை வாடிக்கையாகக் கொண்டு, மக்களை சித்திரவதை செய்து மகிழ்வுறு கின்றது. இன்றைய மய்ய ஆட்சியாளர்களால் யாதொரு புதுத் திட்டமோ, வரையறையோ, மக்களின் மேம்பாடோ ஏதுமில்லை. இருப்பதை எல்லாம் தனி யாருக்கு ஒப்பந்தம் போட்டு தாரை வார்ப்பதே நோக்கம்.



கலைஞர், முதலாம் ஆட்சிக்காலத்தில் தனியாரின் ஏகபோகமாயிருந்த போக்கு வரத்தை அரசு டைமையாக்கினார். ஆறு போக்குவரத்து கோட்டங் களாக்கி, அதில் பல லட்சம் பணியார்ளகளை நியமித்தார். இது ஒரு பொது


அ.இரா. முல்லைக்கோ

வுடைமைக்கு சிறப்பு. பல குடும்பங்களுக்கு உத்தர வாதத்துடன் கூடிய நல்வாழ்வு.

பொதுத்துறை நிறுவனங்களில் தலைமையெல்லாம் பார்ப்பனர்கள். நிர்வாகத் திறமையின்மையால் எல்லாம் நட்டக் கணக்கு. எல்லாவற்றிலும் கையூட்டு. கொள்ளையோ கொள்ளை. வளையாத குண்டூசியை செய்கின்ற நாடுதான் இரண்டாக உடையாத விமானம் தயாரிக்க முடியும்.

எல்லாம் சிவ மயம் என்பார் அஞ்ஞானவாதி! எல்லாம் தனியார் மயம் என்கின்றனர் ஆட்சியா ளர்கள்!

இந்திய ஏர்லைன்ஸ், சேலம் இரும்பு உருக்காலை, நெய்வேலி நிலக்கரி ஆலை, தொடர்வண்டித்துறை, விண்வெளி ஆய்வகம், ரிசர்வ் வங்கியின் கிளை வங்கிகள், இராணுவ ஆயுத உற்பத்தி, சாலைகள் முதல் சாலைகள் முடிய தனியார் கார்ப்ரேட் தன்வந்தர் களுக்கு தாரை வார்ப்பாகவே நாளொரு அறிவிப்பு. நட்டத்தை ஏற்படுத்தும் அதிகாரிகளுக்கு என்ன தண்டனை வழங்கியுள்ளது அரசு!

சான்றாய் இந்திய ஒன்றியத்தின் தொடர்வண்டியை அலசுவோம். உலகத்திலேயே பெரும்பாலோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனம் இந்தியன் ரயில்வேதான். இது 16 மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. தெற்கு ரயில்வேயின் தலைமையகம் சென்னையும் கிழக்கு ரயில்வேயின் தலைமையகம் கொல்கத்தாவும், வடக்கு ரயிவேயின் தலைமையகம் நியூடெல்லி என பிரித்தமைக்கப்பட்டுள்ளது. இரயில் வேயின் மொத்த இருப்புப்பாதை 1.16 லட்சம் கி.மீட்டராகும். இதில் பயணிகள் இரயில்கள் 13,523. சரக்கு இரயில்கள் 7421 பயணிக்கின்றன. தொடர் வண்டி நிலையங்கள் 7372. சுமார் 13 லட்சம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 2.30 கோடி பயணிகள் பயணிக்கின்றனர். இரயில் பயணிகளின் சேவை துவங்கி 167 ஆண்டுகள் நிறைவடைகின்றன. நாட்டை ஆண்ட வெள்ளை யர்கள் தங்களின் போக்குவரத்தை மையமாக வைத்தே இத்துறையை உருவாக்கி, இன்று மிகப் பெரிய அளவில் வளர்ந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ரயில் போக்குவரத்து என்பது சேவையாகவே நீடித்து வந்தது. ஆனால், சேவை என்பதை மாற்றி எதையும் லாபம், நட்டம் என்று வணிக கணக்கோடு பார்க்கும் அதிகா ரிகள், ஆட்சியாளர்களால் நிலைமை இப்போது மாறிப்போனது. உலகிலேயே குறைவான கட்டணம் வசூலிப்பதால் நட்டம் ஏற்படுகிறது என்று காரணம் கூறி கட்டணக் கொள்ளையில் இறங்கியது இரயில்வே நிர்வாகம். ஏழை எளிய மக்கள் வெளியூர் சென்று தொழிலோ, வேலையோ செய்யப் போவதால் தனி நபரின் பொருளாதாரம் மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரமும் வளரும். ஆனால், எவன் எக்கேடு கெட்டால் என்ன? எனக்குத் தேவை லாபம் என்ற நோக்கத்தில் அதிகாரிகள் செயல்பட, அவர்களை ஆட்சியாளர்களும் ஊக்குவிக்க, அடுத்தடுத்து எடுக்கப் படும் முடிவுகளால் ரயில்கள் எழை எளியோர்க்கானது இல்லை என்ற நிலை உருவாகி வருகிறது.

இரயில் நிலையங்கள் தனியாருக்கு தாரை வார்ப்பு, தனியார் இரயில்கள் இனி தாராளமாக ஓடும் என்று அடுத்தடுத்து தனியார் மய அறிவிப்புகளை அரசு சிறிதும் வெட்மில்லாமல் வெளியிட்ட வண்ணமாய் உள்ளது.

இதுவரை 151 இரயில்கள் தனியார்களுக்கு விற்கபட்டுள்ளது. மக்களின் வரிப்பணத்தில் ரயில் இருப்புப்பாதைகள், ரயில் நிலையங்கள், மின் அமைப்பு, ரயில் இயக்கத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளதை ஒரே நாளில் ஆட்சியா ளர்கள் அறிவிப்பாக வெளியிட்டு வருகின்றனர். இதன் அடுத்த கட்டம் தான் குறைவான வருவாயுள்ள 6000 ரயில் நிலையங்களில் இனி ரயில்கள் நிற்காது என்ற அறிவிப்பு. ஒரு ரயில் நிலையத்தில் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 50 பேர் ரயில்களில் இருந்து ஏறவோ இறங்கவோ வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அது வருவாய் குறைந்த ரயில் நிறுத்தமாகவே கருதப் பட்டு, அங்கு இனிமேல் ரயில் நிறுத்தப்படாது என்று ரயில்வே வாரியத் தலைவர் கூறியுள்ளார்.

கல்லூரி பக்கமே கால் பதிக்காத பீகார் பொருளா தார மேதை லல்லுபிரசாத் யாதவ், மத்திய ரயில்வே மந்திரியாக இருந்தபோது, ரயில்வே துறையை நட்ட மில்லாமல் இயக்கி, அதிகப்படியான லாபத்தை ஈட்டி னார். பயணிகளின் கட்டணத்தை பெரும் அளவில் குறைத்து சாதனை படைத்த வரலாற்றை ஏன் ஆட்சி யாளர்கள் திரும்பிப் பார்க்க மறுக்கின்றனர். பல பல்கலைக் கழகங்களுக்கு லல்லுவை அழைத்து கருத்த ரங்குகள் நிகழ்த்தப் பணித்தனர்.

அண்மையில் 70,000 பி.எஸ்.என்.எல். உயர் கோபு ரங்களைத் தனியாருக்கு வழங்கியுள்ளனர். விருப்ப ஓய்வில் பல ஆயிரம் பணியாளர்களை அனுப்பி விட்ட னர்.

எல்லாத் துறைகளிலும் நிர்வாகத்திறமையின்மை யும், தனியார் கார்ப்ரேட் தன்வந்தர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு ஆட்சியார்களின் செயல்பாடுகள் விளங்கு கிறது.

“ஒட்டடைக்குச்சி ஓய்வெடுக்கப் போனால், சிலந்திப் பூச்சி சிம்மாசனம் கேக்குமாம்!” என்னும் முதுமொழி சான்றாய் உள்ளது.

**R. Mullaigo M.A.,**

G4, Oshana Gardens,
21, Ramamoorthy Nagar Main Road,
DODDA Banaswadi,
Bangaluru - 560043.
Karnataka State.
097401 57077

# ஊரடங்கு தளர்வுகள்
## தமிழக முதலமைச்சர்



கடந்த 30ஆம் நாள் தமிழக முதல்வர் ஊரடங்கு தளர்வுகள் தொடர்பாக அறிவிப்பை வெளியிட்டார்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 25/3/2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்து வருகிறது. அ.தி.மு.க. அரசு, இந்த நோய்த் தொற்றில் இருந்து மக்களைக் காத்து அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அ.தி.மு.க.அரசு எடுத்துவரும் சிறப்பான நடவடிக்கைகளால், அரசின் நலத்திட்டங்கள் மக்களை பெருமளவில் சென்று சேர்ந்துள்ளதால், பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மக்கள் பாதுகாக்கப் பட்டுள்ளதோடு, வேலை வாய்ப்பின்மையும் இரண்டே மாதங்களில், ஆறில் ஒரு பங்காக குறைந்துள்ளது எனவும், தனி நபர் வருவாய் படிப் படியாக உயர்ந்து கொரோனா சூழலால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பில் இருந்து தமிழ்நாடு விரைந்து மீண்டு வருகிறது எனவும் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நான் பல்வேறு நாட்களில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட 12 ஒருங்கணைப்புக் குழுக்களின் கருத்துகளின் அடிப்படையிலும், பல்வேறு நாட்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் காணொலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொதுச் சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் 31- 08 -2020 அன்று முடிய ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது.

எனினும், பொதுமக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நோக்கத்திலும், பல்வேறு பணிகளுக்கு வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. பல்வேறு நாட்களில் நான் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், 298 2020 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், மருத்தவ நிபுணர்கள்

மற்றும் பொது சுகாதார வல்லுநர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், 31.8.2020 முடிய தமிழ்நாடு முழுவதும் தற்போதுள்ள பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும் 30. 09. 2020 நள்ளிரவு 12 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது.

எனினும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டும், நோய்த் தொற்றின் தன்மையை கருத்தில் கொண்டும், தமிழ்நாடு முழுவதும் நோய் கட்டுப்பாட்டுப் பகுதி தவிர, மற்ற பகுதிகளில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் கீழ்க்காணும் பணிகளுக்கும் 1.9.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்களுக்கு இடையே இபாஸ் இன்றி பொதுமக்கள் பயணிக்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து விமானம், ரெயில் மற்றும் இதர வாகனங்களின் மூலம் தமிழ்நாட்டுக்குள் வருவதற்கு இபாஸ் நடைமுறை தொடரும். ஆதார், பயணச்சீட்டு மற்றும் தொலைபேசி, செல்போன் எண்ணுடன் இ பாஸ் விண்ணப்பித்த அனைவருக்கும் ஆட்டோ ஜெனரேட்டர்டு முறையில் கணினி மூலமே சுய அனுமதி உடனடியாக பெறும் வகையில் இபாஸ் வழங்கப்படும்.

அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும், பொது மக்கள் தரிசனம் அனுமதிக்கப்படுகிறது. இதற்கென நிலையான வழிகாட்டு நடைமுறைகள் அரசால் வெளியிடப்படும். இதன்மூலம் ஒரு நாளைக்கு தரிசனத்துக்கு வரும் அதிக பட்ச பக்தர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதுடன், வழிபாட்டுத் தளங்களில் உள்ளேயும் கர்ப்பகிரகம் போன்ற புனித இடத்திற்கும் ஒரே நேரத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே பக்தர்கள் செல்ல அனமதிக்கப்படுவர். வழிபட்டுத் தலங்களில் பொதுமக்கள் தரிசனம் இரவு 8 மணிவரை மட்டும் அனுமதிக்கப்படும்.

மாவட்டத்திற்குள்ளான பொது மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து சென்னையில் பெருநகர பஸ் போக்குவரத்துச் சேவை 1-7-2020 முதல், நிலையான வழிகாட்டு நடைமுறைகளுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. பெருநகர சென்னையில் மெட்ரோ ரெயில் போக்குவரத்து 7-9-2020 முதல் இதற்கென வகுக்கப்படும் நிலையான வழிகாட்டு நடைமுறை களுடன் செயல்பட அனமதிக்கப்படுகிறது. வணிக வளாகங்கள், அனைத்து ஷோரூம்கள், பெரிய கடைகள் 100 விழுக்காடு பணியாளர்களுடன், மத்திய அரசின் குளிர் சாதன வசதி குறித்த வழிகாட்டு நடைமுறை களை பின்பற்றியும், நிலையான வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றியும் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும்,



வணிக வளாகங்களில் உள்ள திரையரங்குகள் இயக்க, தடை தொடரும்.

சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கடைகளும் இரவு 8 மணிவரை இயங்க அனுமதிக்கப்படும். அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, உணவகங்கள், தேநீர்க் கடைகள், காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது. பார்சல் சேவை இரவு 9 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது. சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் 100 விழுக்காடு பணியார்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தவிர்க்க இயலாத பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களைத் தவிர பிற பணியார்களை வீட்டில் இருந்தே பணிபுரிய ஊக்குவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கும் வசதியுடன் கூடிய ஒட்டல்கள், ரிசார்ட்டுகள், கேளிக்கை விடுதிகள் மற்றும் பிற விருந்தோம்பல் சேவைகள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றி இயங்க அனுமதிக்கப்படுகிறது. உடற்பயிற்சி மற்றம் அனைத்து விளையாட்டு பயிற்சிகளுக்காக, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி திறக்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், விளயாட்டு மைதானங்களில் பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது. திறன் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி 21-9-2020 முதல் திறக்க அனுமதிக்கப்படுகிறது.

தற்போது 50 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்கும் அரசு அலுவலகங்கள், 1-9-2020 முதல் 100 விழுக்காடு பணியார்களுடன் இயங்கும். எனினும், தனியார் மற்றம் அரசு அலுவலகங்களிலும், தொழிற்சாலை போன்ற பணியிடங்களிலும், கொரோனா தடுப்பு அலுவலர் ஒருவரை, தொடர்பு அலுவலராக நியமித்து, முறையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுவதையும், நோய்த் தொற்று உள்ளவர்கள் அலுவலகத்திற்கு வருவதைத் தவிர்க்கவும், அறிகுறி உள்ளவர்களை உடனுக்குடன் பரிசோதனை செய்வதை உறுதிப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வங்கிகள் மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்கள் 100 விழுக்காடு பணியார்களுடன் இயங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்துக்கும், கொடைக்கானல், ஏற்காடு போன்ற அனைத்து மலை வாழிடங்களுக்கும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் செல்லுவதை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் இபாஸ் பெற்றுச் செல்ல அனுமதிக்கப்படுவர். திரைப்பட தொழிலுக்கான படப்பிடிப்புகளுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு, ஒரே சமயத்தில் 75 நபர்களுக்கு மிகாமல் பணி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. படப்பிடிப்பின் போது, பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.

ஞாயிற்றுக்கிழமைகளில் அமல்படுத்தப்பட்டு வந்த முழு ஊரடங்கு, செப்டம்பர் மாதம் முதல் ரத்து செய்யப்படுகிறது. மாநிலங்களுக்கு இடையேயான ரெயில் போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட தடங்களில் மட்டும் செயல்படும். எனினும், மாநிலத்துக்குள் பயணியர் ரெயில்கள் செயல்பட 15-9-2020 வரை அனுமதியில்லை. 15-9-2020க்குப் பிறகு, தமிழ்நாட்டுக்குள் பயணியர் ரெயில்களை அனுமதிப்பது பற்றி, சூழ்நிலைக்கேற்ப முடிவு எடுக்கப்படும்.

விமானப் போக்குவரத்து மூலம் பயணிக்கும் வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் உள்ளூர்ப் பயணிகள், ரெயில் போக்குவரத்து மூலம் பயணிக்கும் பிற மாநில பயணிகள், தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்றை கண்டறிதலுக்கான புதிய நடைமுறை வெளியிடப்படும். தற்போது நாள்தோறும் சென்னை விமான நிலையத்தில் வெளிமாநிலங்களில் இருந்து 25 விமானங்கள் தரையிறங்க அனுமதித்துள்ள நிலையில், இனி 50 விமானங்கள் வரை தரையிறங்க அனுமதிக்கப்படுகிறது. இதுதவிர கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, சேலம் ஆகிய விமான நிலையங்களில் விமானங்கள் தரையிறங்க தற்போது அனமதிக்கப்பட்டுள்ள நிலை தொடரும்.

மாநிலம் முழுவதும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144ன் கீழ் பொது இடங்களில் 5 நபர்களுக்கு மேல் கூடக்கூடாது என்ற தடை உத்தரவு தொடர்ந்து அமலில் இருக்கும். தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் தற்போதுள்ள நடைமுறைகளின்படி, எந்தவிதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாகக் கடைபிடிக்கப்படும்.

அ.தி.மு.க. அரசு அமல்படுத்தி வரும் கட்டுப்பாடுகள் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர பரிசோதனைகள் மூலம், நோய்த் தொற்று அதிகரிக்கும் வேகம் குறைந்திருந்தாலும், நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து கணிசமான அளவில் உள்ள நிலையில் மக்களைக் காக்க தற்போதுள்ள ஊரடங்கு நடைமுறையை மேலும் தொடர வேண்டிய நிலையில் அரசு உள்ளது. இதனால் நோய்ப் பரவல் மேலும் பரவுவதைக் கட்டுப் படுத்த இயலும். எனவே, பொதுமக்கள் அரசு எடுத்து வரும் இத்தகைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக்கொள்கிறேன். நோய்த் தொற்றின் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பொதுமக்களின் ஒத்துழைப்பையும், நோய்த் தொற்றின் நிலையையும் கருத்தில் கொண்டு அவ்வப்போது தேவைக்கேற்ப மேலும் தளர்வுகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ●

ஆன்லைன் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட தமிழக யோகா மருத்துவர்களை, இந்தி தெரியவில்லை என்றால் வெளியேறுங்கள், கேள்வி கேட்டால் தலைமைச் செயலாளர் மூலம் நடவடிக்கை எடுக்கப் படும் என மத்திய ஆயுஷ் அமைச்சத்தின் செயலர் ராஜேஷ் கோட்சே மிரட்டியுள்ளார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் யோகாவை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் யோகா சம்பந்தமான படிப்பு முடித்த 1.25 இலட்சம் பேரை மத்திய ஆயுஷ் அமைச்சகம் நாடு முழுவதும் நியமிக்க திட்டமிட்டுள்ளது. அதன்படி 350 யோகா மற்றும் இயற்கை மருத்துவர்களை தேர்வு செய்து அவர்களின் பட்டியல் மத்திய ஆயுஷ் அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.


தமிழகத்தில் இருந்து மாவட்டத்திற்கு ஒரு மருத்துவர் என 38 யோகா மற்றும் இயற்கை மருத்துவர் களின் பெயர்ப் பட்டியல் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநரகம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவர் களுக்கு ஆன்லைன் பயிற்சி வகுப்புகள் கடந்த 18ஆம் தேதி முதல் நடந்தன. நாடு முழுவதும் 350 மருத்துவர்கள் ஆன்லைன் வகுப்பிகளில் கலந்து கொண்டனர். கடைசி நாளான 20/8/2020 காலை 10 மணிக்கு ஆன்லைனில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்தவுடன் மத்திய ஆயுஷ் செயலர் ராஜேஷ் கோட்சே கலந்து கொண்டு இந்தியில் பேசியுள்ளார். அப்போது தமிழகத்தில் இருந்து கலந்து கொண்ட மருத்துவர்கள், “எங்களுக்கு இந்தி தெரியாது, நீங்கள் பேசுவது புரியவில்லை. யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறை என்று இருக்கும்போது யோகாவை மட்டுமே கூறுகிறீர்கள். இயற்கை மருத்துவத்தைப் புறக்கணிக்கிறீர்களா?“ என்று ஆன்லைன் வகுப்பு கமாண்ட் பாக்சில் பதிவிட்டுள்ளனர். ஆங்கிலத்தில் பேசுங்கள் என்றும் கூறியுள்ளனர். இதனால், கோப மடைந்த அவர், “எனக்கு ஆங்கிலம் தெரியாது. இந்தி தெரியவில்லை என்றால் ஆன்லைன் வகுப்பில் இருந்து விலகுங்கள்“ என்று கோபமாகப் பேசியுள்ளார். இதனால் அனை வரும் அவரிடம் சரிமாரியாக கேள்வி எழுப்பியுள்ள னர். இதனால் மாலை 6 மணிவரை நடைபெற வேண் டிய பயிற்சி வகுப்பு 4 மணிக்கே ரத்து செய்யப்பட்டு, இணைப்பைத் துண்டித்து விட்டனர்.

இந்நிகழ்வு சமூக வலைதளங்களில் பரவி, நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனால் மேலும் கோபம் அடைந்த மத்திய ஆயுஷ் செயலர் ராஜேஷ் கோட்சே, தனக்கு எதிராக யாரெல்லாம் பேசினார் களோ, அவர்களின் பெயர்ப் பட்டியலை தயார் செய்து அனுப்பி வையுங்கள். அந்தந்த மாநில தலைமைச் செயலாளர்களுக்கு அவர்களின் பெயர்ப் பட்டியலை அனுப்பி வைத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன் என்று மிரட்டியுள்ளார்.

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தில் செயலர் பதவியில் உள்ள ராஜேஷ் கோட்சே கடந்த இரண்டு ஆண்டு களுக்கு முன்பே ஓய்வு பெற்றவர். பாசகவின் முக்கியப் பொறுப்பில் உள்ளவர் களுக்கு வேண்டியவர் என்பதால் அவர்களின் சிபாரிசில் மேலும் 2 ஆண்டு கள் பணி நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.



# இந்தி வெறியர் ராஜேஷ் கோட்சே?



# மக்களுக்கு சேவை புரிந்த என் தாய் தேசத் துரோகியா?

பிரதமர் மோடியைக் கொல்ல சதித்திட்டம் தீட்டிய தாகக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கைது செய்யப்பட்ட 5 சமூகச் செயற்பாட்டாளர்களில் ஒருவர் வழக்கறிஞர் சுதா பரத்வாஜ். பெரிய இடத்துப் பெண்ணாக சீரும் சிறப்புமாக வளர்க்கப் பட்டவர்.

கான்பூர் ஐஐடியில் பட்டப் படிப்பு முடித்துவிட்டு அமெரிக்காவில் குடியுரிமை பெற்று அங்கு வாழ்ந்து வந்தவர். இந்தியப் பழங்குடி மக்களின் சொல்லெண் ணாத் துயரங்களைக் கண்டு அவர்கள் வாழ்வை மீட்டெடுப்பதற்காகவே சட்டம் படித்தவர். அமெரிக்க குடியுரிமையை உதறித் தள்ளிவிட்டு இந்தியா வந்து சத்தீஸ்கர் மாநில பழங்குடியின மக்களின் வாழ்வாதா ரத்துக்காகச் சட்டப் போராட்டம் நடத்தியவர்.

டெல்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் கவுரவப் பேராசிரியையாக பணியாற்றி வந்த தொழிற்சங்கவாதி, சமூகச் செயற்பாட்டாளர், ஒடுக்கப் பட்ட மக்களின் வழக்கறிஞர்தான் சுதா பரத்வாஜ். மாவோயிஸ்ட் என்று பழிசுமத்தப்பட்டு பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டு இரண் டாண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டு இருக்கும் இவருடைய உடல் நிலை மிகவும் மோசமடைந்துள் ளது.

இருப்பினும் சமூக ஆர்வலர் வரவரராவ் போலவே இவருக்கும் சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் இருப்பதையும் அதை நீதிமன்றமும் கண்டிக்காமல் இருப்பதையும் வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் உட்பட பலர் விமர்சித்து வந்திருக்கிறார்கள். இந்நிலையில் சுதா பரத்வாஜின் 23 வயதான மகள் மாய்ஷா தன்னுடைய தாய் குறித்து கடிதம் ஒன்றை எழுதி இருக்கிறார். அதனை இங்கு மொழிபெயர்த்துப் பதிவிடுகிறேன்.

“இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதே நாளில் அம்மா கைது செய்யப்பட்டார். வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த அம்மாவை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரை என்னால தொட முடிந்தது. அவருடன் பேச முடிந்தது. ஆனால், அம்மா சிறையில் அடைக்கப்பட்ட பிறகு என் இதயம் சுக்குநூறாக நொறுங்கிப்போனது. அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தத்தளித்தேன். பல மாதங்கள் விடாமல் அழுது கொண்டிருந்தேன். பூனா நீதிமன் றத்தில் அம்மாவைக் காணச் செல்லும் போதெல்லாம் போலீஸ்காரர்கள் சூழ, குற்றவாளி போல அவர் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அது ஒரு கொடிய காட்சி. சிறைசாலையில் அம்மா எப்படி சமாளிக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. நீதிமன்ற வளாகத்துக்குள் அம்மாவை அணைத்துக் கொள்ள ஒரு முறை முயன்றேன். ஆனால், ஈவிரக்கமின்றி என் கையை தட்டிவிட்டார் அங்கிருந்த பெண் காவல் துறை அதிகாரி. நான் வெகுண்டெ ழுந்தேன். ஆனால், அப்போதும் அம்மா நிதானம் இழக்க வில்லை. அவர்களிடமும் பரிவுடன் நடந்து கொண்டார்.

கொரோனா காலம் உலகைப் பீடித்ததை அடுத்து தங்களுடைய குடும்பத்தினரிடம் தொலைபேசியில் பேச, சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டார்கள். எப்படியும் அம்மா என்னை அழைத்துப் பேசி விடுவார் என்று தினமும் காத்துக் கிடப்பேன். ஒருவழியாக ஜூன் 9ஆம் தேதி அம்மாவின் குரலைக் கேட்டேன். நான்கு மாதங்கள் கழித்து அம்மாவின் குரலைக் கேட்க நேர்ந்தபோது பூரித்துப்போனேன். உணர்ச்சி வசப்பட் டேன். இங்குள்ள மக்களுக்குச் சேவை புரிவதற்காக அமெரிக்கக் குடியுரிமையை விட்டுக் கொடுத்தவர் என்னுடைய தாய். ஆனால், அரசுக்கு எதிராகச் செயல் பட, ஏழை மக்களைத் தூண்டிவிடவே என்னுடைய தாய் அமெரிக்கக் குடியுரிமையை துறந்ததாக அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது.

அவர்களிடம் ஒன்றைக் கேட்க நினைக்கிறேன், தன்னுடைய நாட்டு மக்களுக்குச் சேவை புரிய அமெரிக்காவின் சுகபோக வாழ்க்கையை விட்டுக் கொடுத்தவர் எவரேனும் உண்டா? அப்படிப்பட்ட ஒருவர் தேச துரோகி என்று முத்திரை குத்தப்பட்ட துண்டா?

*என்னுடைய பாட்டி கிருஷ்ண பரத்வாஜ் பிரபல பொருளாதார நிபுணர். அவர் தன்னைப் போலவே தன்னுடைய மகளையும் உருவாக்க ஆசைப்பட்டார். ஆனால் என்னுடைய தாய் தன்னுடைய பாதையைச் சுயமாகத் தேர்ந்தெடுத்தார். இது தேச விரோதமாகுமா? தன்னுடைய உடல் ஆரோக்கியத்தைப் பொருட்படுத் தாமல் இரவும் பகலுமாக இப்படி உழைக்க வேண்டுமா என்று அம்மாவிடம் நான் சண்டையிட்டிருக்கிறேன். அதற்கு அம்மா சொல்வார், "நம்மைப் போன்றவர்கள் உழைக்காவிட்டால் பிறகு ஏழை மக்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்?" நான் சாதாரணமாக வாழ ஆசைப் பட்டடேன். தினந்தோறும் சாப்பாடு கட்டிக்கொடுத்த பள்ளி, கல்லூரி வாசலில் இறக்கிவிடும் தாய் வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.*

*ஆனால், என்னுடைய அம்மா சாதாரண தாய் அல்லவே. அவர் செய்தவற்றைச் செய்யக்கூடிய மனத் திண்மை உலகில் மிகச் சிலருக்கு மட்டுமே வாய்க்கும். அதனால்தான் என்னமோ இன்று அவர் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார். என்னுடைய தாயின் துணை இல்லா விடிலும் நான் செய்யும் அத்தனை யிலும் அவருடைய பிரதிபலிப்பு இருக்கவே செய்கிறது.*

*அவர் உறுதியானவர், சுதந்திரமானவர், அச்ச மற்றவர், என்னைவிடவும் உறுதியானவர் அம்மா என்பது எனக்குத் தெரியும். சிந்தனையாளர் பிராட் மெல்ட்ஜர் சுட்டிக் காட்டியது போல, நீங்கள் ஒன்றை நம்புவீர் களேயானால் அதற்காகப் போராடுங்கள். அந்த முயற்சிக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதுவரை போராடியதைக் காட்டிலும் இன்னும் வலுவாகப் போராடுங்கள்.*

*நன்றி :* **தி இந்து (ஆங்கிலம்)**

*தமிழில் : ம.சுசித்ரா*

# இயலாமை

**வி**லங்குகளில்
நாய்களிடம்
அதன் நன்றியுணர்வை அறிந்தேன்!

நரிகளிடம்
அதன் தந்திர யுக்தியை அறிந்தேன்!

புலியிடம்
அதன் பதுங்கிப்பாயும் திறன் அறிந்தேன்!

செந்நாய்க் கூட்டங்களிடம்
அதன் ஒற்றுமையுணர்வை அறிந்தேன்!

யானைகளிடம்
அதன் ஞாபக ஆற்றலை அறிந்தேன்!

சிங்கங்களிடம்
அதன் தலைமைப்பண்பை அறிந்தேன்!


ஒவ்வொரு விலங்கிற்கும் ஒவ்வொரு
குணம் என்பதையும் அறிந்தேன்!

இத்தனை விலங்குகளின்
குணநலன்களையும் ஒருங்கே
அமையப்பெற்ற மனிதர்களைத்தான்
அறிய இயலவில்லை எப்படி
எந்தநேரத்தில் எந்த விலங்காய்
இருப்பார்கள் என்று...!

அன்புடன்
**மகிழை. சிவகார்த்தி,** புறத்தாக்குடி,
8147480966.

# பெருங்கவிக்கோவின் கேள்வி?

**பெ**ருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களிடம் கேள்வி ஒன்றைக் கேட்டுள்ளார்.



கடவுள் மறுப்புக் கொள்கை ஒன்றைத் தவிர்த்து, மற்ற அனைத்திலும் தந்தை பெரியாரைப் பின்பற்றும் என்னைப் போன்றவர்களை, திராவிட இயக்கத்தவர் பலர் ஒதுக்கி விட்டார்கள். என் போன்ற பகுத்தறிவுப் பக்தர்களையும் கழகத்தில் இணைத் துக் கொண்டால் கழகத்துக்கும் நாட்டுக்கும் நலம் பயக்காதா?

இதற்குப் பதிலாக, "நன்றி சகோதரர் பெருங்கவிக்கோ அவர்களே!

தங்களைத் திராவிட இயக்கத்தவர்களால் ஒருபோதும் ஒதுக்க முடியாது. காரணம் தாங்கள் ஆற்றும் தமிழ்த் தொண்டு திராவிடர் இயக்கப் பணியின் ஒரு முக்கியக் கூறுதானே! பகுத்தறிவு – பக்தர்கள் – 'முரண்தொடை' என்றாலும் தங்களைப் போன்றவர் களை, எப்போது நாம் இணைத்தே ஒரு குடும்பமாக கருதியே வருகிறோம். அஞ்சற்க!" என்று கூறியிருக்கிறார்.



# மொழி

## ஓர் இனத்தின் அடையாளம்

எல்லோரும் நகைச்சுவையாகவே கருதிக் கொண்டிருக்கிறார்கள். மொழி என்பது வெறும் கருவி அல்ல. அது ஓர் இனத்தின் அடையாளம். முறையாக இந்தி பயின்று அம்மொழியின் ஆசிரியனாகவே பணியாற்றியவன் என்ற அதிகாரப்பூர்வ உரிமையோடு கருத்துச் சொல்கிறேன்.

இந்தி என்று எதை இன்று அழைக்கிறார்களோ அது ஒரு மொழி அல்ல. இந்தியால் பிற மொழிகளும் அம்மொழிகள் பேசும் மக்களின் பண்பாடும் சிதையும் என்பது 100 விழுக்காடு உண்மை. அதை விடப் பெரிய 200 விழுக்காடு உண்மை ஒன்று இருக்கிறது. அது இந்தி பேசுவதாகச் சொல்லப்படும் மாநில மக்களின் மொழிகள் அழிந்தன.

ஹரியானா மாநிலத்தின் ஹரியாணவி, பீஹார் மாநிலத்தின் போஜ்புரி, மகஹி, மைதிலி, பிகாரி, உத்தர பிரதேச மாலிநத்தின் பூர்வ மொழி, பஷ்சிமீ மொழி, அவதி, ஸதுக்கடி, வ்ரஜ, ராஜஸ்தான் மாநிலத்தின் ராஜஸ்தானி, ஜயபுரி, மார்வாடி, மத்தியப்பிரதேசத்தின் சத்தீஸ்கடி, புந்தேல்கண்ட், இமாச்சலப்பிரதேசத்தின் குமாஊங், கட்வாலி, இன்னும் எண்ணற்ற பஹாடி எனப்படும் மொழி (ஒவ்வொரு மலைப்பகுதியிலும் வாழும் மக்கள் பேசும் வெவ்வேறு பழங்குடி மொழிகள்) எல்லாம் அழிந்ததுன, அல்லது அழிவிற்கு அருகே உள்ளன. (நான் கல்லூரி படிக்கும்போது உத்தரகாண்ட், ஜார்கண்ட் மாநிலங்கள் இல்லை. அவை இரண்டை யும் உத்தரப்பிரதேசம், பீகார் மாநிலங்கள் என்றே புரிந்து கொள்ள வேண்டும்.)

1850 வாக்கில் கான்பூர், மீரட் பகுதியில் மட்டும் பேசப்பட்டுக் கொண்டிருந்த கடிபோலி என்ற மொழியை பாரதேந்து ஹரிஷ்சந்திர என்ற பெயர் கொண்ட ஓர் அறிஞர் இலக்கியத்திற்குப் பயன் படுத்தினார். அது அவருக்கு எளிதாக வந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் பயன்படுத்தப்பட்ட கடிபோலி தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டு இன்று இந்தி பேசுவதாகச் சொல்லப்படும் மக்களின் மொழிகளை குரூரமாகக் கொலை செய்தது.

இந்தி ஆதரவாளர்களிடம் இராமாயணம் துளசி தாசரால் எந்த மொழியில் எழுதப்பட்டது என்று கேளுங்கள்? விழிப்பார்கள். அது அவதி மொழியில் எழுதப்பட்டது. சூரதாசின் பிரபலமான கவிதைகள் எந்த மொழியில் எழுதப்பட்டது என்று கேளுங்கள், விழிப்பார்கள். அது வ்ரஜ மொழியில் எழுதப்பட்டது. வித்யாபதியின் அஷ்டபதி எந்த மொழியில் எழுதப்பட்டது என்று கேளுங்கள், விழிப் பார்கள். அது மைதிலி மொழியில் எழுதப்பட்டது. இன்றைய கடிபோலியில் முனைவர் பட்டமே பெற்றி ருந்தாலும் உரை ஆசிரியனின் உதவியின்றி மேற்கண்ட நூல்களின் பொருள் புரிந்து கொள்ள முடியாது.

எப்படி பல தாய் மொழிகளை இந்தி ஆக்கிர மித்தது, பல இனங்களின் பெருமைகளையும், அடை யாளங்களையும் முற்றிலும் அது அழித்தது என்பதற் காக சான்றிதழ்தான் இது. (கன்னட, தெலுங்குக்கு இப்போது இது மெல்ல நடந்து வருகிறது)

எந்த இந்தி மொழி அறிஞுனிடமும் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். நான் 30 ஆண்டுகள் ஆசிரிய னாகப் பணியாற்றிய காலத்தில் (முதலில் கேந்திரிய வித்யாலயா, பின் சைனிக் பள்ளி) மாணவர்களுக்கு இந்த உண்மைகளைச் சொல்லியே வந்திருக்கிறேன்.

**தானம் தவமிரண்டு தங்கா வியனுலகம்**
**வானம் வழங்காதெனின்.**

என்று பல்லாயிரம் ஆண்டுகள் பெருமைப்பட்ட தமிழுலகத்தின் பண்பாட்டை 'ரெயின் ரெயின் கோ அவே' என்று ஆங்கில மொழிப் படையெடுப்பு எப்படி மாற்றியதோ, பிற மொழிகளாலும் அதுவே நிகழும்.

**சீனி.மோகன்,** 94438 89906.

## தமிழ்மொழி வரலாற்றில் பத்திரிகைகளுக்கு முக்கிய இடமுண்டு!



இலங்கை தமிழ் இலக்கிய வரலாறு மற்றும் மொழி வரலாற்றில் பத்திரிகைகளுக்கு முக்கியபங்கு உண்டு என்று இணைய வழி ஆய்வரங்கில் தெரிவிக்கப்பட்டது.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்திய இணையவழி ஆய்வரங்கு ஆகஸ்ட்டு 20 அன்று நடந்தது. உலகத்தமிழ்ச்சங்க இயக்குநர் ப. அன்புச்செழியன் தலைமை தாங்கினார். ஆய்வரங்கில் இலங்கைத் தமிழ் ஊடகங்களின் மொழிப் பயன்பாடு என்ற தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் க.ரகுபரன் பேசியதாவது :

இலங்கையில் தமிழ் இலக்கிய வரலாறு மற்றும் மொழி வரலாற்றில் பத்திரிகைகளுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. பத்திரிகைகளினால்தான் செய்யுள் வடிவில் இருந்த மொழி நவீனமயப்படுத்தப்பட்டது. செய்யுள் வடிவ மொழி, வசன நடைக்கு மாறுவதற்குப் பத்திரிகைகள் முக்கியப் பங்காற்றின.

தொடக்கத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் பின்னர் சுயமொழித் தாக்கத்தால் தமிழ் மொழிக்கும் இடமளித்தன. இதனால் இருமொழிப் பத்திரிகைகளாக வெளிவந்தன. ஆங்கிலம், சமஸ்கிருதத்தின் ஆதிக்கம் அதிகமாகவே இருந்தது.

பத்திரிகைகள் வர்த்தக நோக்கத்திற்கு மாறியதால் தமிழ்ச் சூழலில் இருந்து விடுபடத் தொடங்கின. இதனால் உள்ளடக்கத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டது. சமூக நடைமுறைத் தேவைகள் பேசுபொருளாக மாறின. தற்போது ஊடகங்களில் ஆங்கிலம் கலந்து பேசுவது பெருமையாக கருதப்படுகிறது. இதற்குக் காரணம் நம்முடைய அடிமைத்தனம்தான்.

உணர்ச்சியைத் தூண்டுகிற வகையில் சொற்களை பயன்படுத்தவது மொழியை மட்டுமல்ல பண்பாட்டையும் சிதைக்க வல்லது என்றனர். ஆய்வரங்கில் யாழ்ப்பாண தமிழ்ச்சங்க நிர்வாகிகள், ஆய்வு மாணவர்கள் பங்கேற்றனர்.

**தமிழரசு,** மதுரை

## பனை மரத்தின் வகைகள்

1. ஆண் பனை
2. பெண் பனை
3. கூந்தப் பனை
4. தாளிப்பனை
5. குமுதிப் பனை
6. சாற்றுப் பனை
7. ஈச்சம் பனை
8. ஈழப் பனை
9. சீமைப் பனை
10. ஆதம் பனை
11. திப்பிலிப் பனை
12. உடலற் பனை
13. கிச்சிலிப் பனை
14. குடைப் பனை
15. இளம் பனை
16. கூறைப் பனை
17. இடுக்குப் பனை
18. தாதம் பனை
19. காந்தம் பனை
20. பாக்குப் பனை
21. ஈரம் பனை
22. சீனப் பனை
23. குண்டுப் பனை
24. அலாம் பனை
25. கொண்டைப் பனை
26. ஏரிலைப் பனை
27. ஏசறுப் பனை
28. காட்டுப் பனை
29. கதலிப் பனை
30. வலியப் பனை
31. வாதப் பனை
32. அலகுப் பனை
33. நிலப் பனை
34. சனம் பனை



## பனை தரும் பயன்கள்!

நுங்கு, பனம் பழம், பனாட்டு, பாணிப்பனாட்டு, பனங்காய், பனங்கள்ளூ, பனஞ்சாராயம், வினாகிரி, பதநீர், பனங் கருப்பட்டி, பனை வெல்லம், சில்லுக் கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனஞ்சீனி, பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல் புட்டு, ஒடியல் கூழ், பனங்குருத்து.

பனைஒலைகள், பனைஓலைச் சுவடிகள், பனைஒலைத் தொப்பி, குருத்தோலை, நீற்றுப் பெட்டி, கடகம், பனைப்பாய், கூரை, வேலி, பனையோலைப் பெட்டி, கடையப் பெட்டி, நார்ப் பெட்டி, கொட்டான், விசிறி, கிளுகிளுப்பான், அலங்காரப் பொருட்கள். பனம் மட்டை, தும்புப் பொருட்கள், விறகு, மரம்.

# தமிழுக்கு என்னம்மா குறை?

## உண்மை நிகழ்வு




இந்தியை ஆதரிக்கும் தமிழர்கள் திருந்த வேண்டும்.

கடந்த சனிக்கிழமை எனது கணவரின் நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவரோட அப்பா பெங்க ளூர் யுனிவர்சிட்டியில் பேராசிரியராக பணி யாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ், கன்னடம், தெலுங்கு, துளு, ஆங்கிலம் என பல மொழிகளை அறிந்தவர்.

கன்னட மொழி குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். அவர் ஒரு கன்னடர். அவரிடம் பேச வாய்ப்புக் கிடைத்தது. அவர் கூறிய செய்திகளால் எனது இந்தி மொழி குறித்த சிந்தனையே மாறிப்போய் விட்டது.

“அம்மா, தமிழும் போல ஆட்சி செய்யணும்னு தான் நாங்களும் விரும்பறோம் (அவர் சொன்னது கருணாநிதி, ஜெயலலிதா வரையிலான அரசு) அங்கு கருணாநிதியும் ஜெயலலிதாவும் அருமையான கட்டமைப்பை உருவாக்கி வச்சிருக்காங்க. ஆனா இப்ப அங்கேயும் வடமாநில ஆதிக்கம் ஊடுறவுரத பாக்க முடியுது. ரொம்ப வேதனையா இருக்கு.

எங்களைப் பாத்து நீங்க திருந்திக்கணும். இங்க பெங்களூருல இந்தி மொழி ஆதிக்கம் வந்து பல காலமாயிடுச்சு. கொஞ்சம் கொஞ்சமா ஊடுறுவி இப்ப உங்களால சமாளிக்க முடியாத அளவு ஆக்கிரமிச் சிட்டாங்க. அவன் வடநாட்டுல எங்கிருந்தோ இங்க வந்து இந்தில பேசறான். எனக்கு இந்தி மட்டுந்தான் தெரியும்னு ஆணவமாச் சொல்றான். கன்னடம் தெரியாதுங்கறான். எவரும் உலகத்துல எங்க போனா லும் அந்தப் பிரதேச மொழியில் பேசுறதுதான் வழக்கம். ஆனா இங்க மட்டும் அவனுக்காக நாங்க எங்க தாய்மொழிய விட்டுட்டு அவன்கிட்ட இந்தில பேசற நிலைமைக்கு வந்துட்டோம்.

மொழிங்கறது வெறும் பேச்சில்லைம்மா. அது வாழ்க்கை, ஜீவாதாரம். ஆனா, நாங்க அந்த ஜீவா தாரத்தைத் தொலைச்சிட்டு இருக்கோம். இப்ப எங்க தாய்பூமி பெங்களூர்ல குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வாழ முடியும்கிற அளவுக்கு ஒடுக்கப்பட்டு வருகிறோம். சிட்டியில முக்கிய இடங்கள்ல அவனுங்கதான் வாழுறானுக.

இதுக்கெல்லாம் அடிப்படை காரணம், தமிழகம் மாதிரி மாநில நலன் சார்ந்த கட்சிகளை நாங்க ஆதரிக்காம தேசியக்கட்சிகளை ஆதரித்ததுதான் மிக முக்கிய காரணம். தமிழகம் போல இருமொழிக் கொள்கை இல்லாம மும்மொழிக் கொள்கையை ஏற்றதுதான் தவறு. அவன் கடிக்க வர்ற நாய்க்கு எலும் பைப் போடுற மாதிரி, நவோதயா பள்ளி ஆரம்பிச்சா மத்திய அரசு நிதி தரும். அது தரும், இது தரும்னு ஆசை காட்டுவாங்க. அது உங்க நன்மைக்கு இல்ல. அவன் ஆளுங்களுக்கு வாழ்வாதாரத்தை அதிகப்படுத் தத்தான்.

தமிழுக்கு என்னம்மா குறை? ஏன் இந்தி கற்க ஆர்வப்படுறீங்க? உள்ளூர் தொடர்புக்கு தமிழ். உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் போதும்மா. இப்பவே பல நிலைகளிலும் உங்க வேலை வாய்ப்புகளை இந்திக் காரங்க பறிக்க துவங்கியாச்சு. நீங்க இந்திமேல ஆர்வப் பட்டா அவங்க ஊடுறுவுவதும் தன் ஆட்களை தென் மாநிலங்களில் குடியேற்றுவதும் எளிதாகிவிடும். எனவே அனுபவப்பட்டவன் என்ற முறையில் நான் சொல்றேன்.

இந்தி கற்க ஆர்வம் காட்டாதீங்க. ஒருவேளை வடமாநிலத்துக்கு யாராவது வேலைக்குப் போனா அவன் தானாகவே இந்தி கத்துக்குவான். மும்மொழிக் கொள்கைய ஆதரிக்காதீங்க. தேசியக் கட்சிகளை ஆதரிக்காதீங்க. இதெல்லாம் செஞ்சா உங்க வாழ்வாதாரமே சீரழிஞ்சிடும். உங்க தலைமுறைக்குப் பிறகு உங்க இனமும் அவனுக்கு அடிமைப்பட்டுப் போய்விடும்” என்று வருத்தப்பட்டுச் சொன்னார்.

**தமிழ்ப்பெண்**

# போதி மரத்துப் 'புத்தனை' விநாயகனாக்கிய ஆரிய வரலாற்று திருட்டுச் சூழ்ச்சி!



பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொல்லுவார் "The history of India is nothing , the battle between Buddhism and Brahmanism" என்று அதாவது இந்திய வரலாறு என்பது எதுவுமில்லை, ஆரியத்துக்கும் பௌத்தத்திற்கமான போரே இந்த வரலாறு என்று. இந்திய வேத, பூத, பார்ப்பன, புலுகு மூட்டைகளான வேதங்கள், ஷ்மிருதிகள், ஆரண்யங்கள், உபநிஷத்துக்கள், என சமஸ்கிருதத்திலுள்ள புராண குப்பைகள், வரலாற்று திருட்டுகளையெல்லாம், சமஸ்கிருதத்தில் பட்டம் பெற்று ஆராய்ந்தறிந்து கற்றுணர்ந்து சொன்னவர்தான் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள்.

விநாயக சதுர்த்தி தினம், அதற்காக இங்கு நான் இருக்கும் இந்த சென்னைப் பகுதிகளைச் சுற்றி ஒரே ஆரவாரம், கேளிக்கை, கொண்டாட்டம் என இந்த பைத்தியக்காரத்தனங்கள் வழக்கத்திற்கும் மாறாய் இந்துவெறியர்களின் ஆட்சியில் பல மடங்கு அதிகரித்துள்ளது.

சரி, யார் இந்த விநாயகன்? ஆரியம் சொன்ன அந்த கதைகளை வைத்து, அழுக்கில் உருவானவர், யானைத் தலைகளை பொருத்தியவனென்றெல்லாம் அவர்கள் சொன்ன கதைகளை வைத்தே நாம் நையாண்டிகள் செய்வது ஒரு புறம் இருக்கட்டும்! புத்தன் தன் அரச வாழ்வைத் துறந்து அதன் மரத்தடியில் அமர்ந்த காரணத்தினாலே, அரு அரசமரம் என்றாயிற்று. ஆங்கிலத்தில் (Bothi tree) என்றழைக்கப் படுகிறது. பின்நாளில் பௌத்த பண்பாட்டு வாழ்வியல் முறைகளை அழிக்கத் துவங்கிய இந்து ஆரியம், நம் மக்களின் பழக்க வழக்கங்களாய் ஊறிப்போன செயல்களை மாற்ற இயலாத காரணத்தினால், பௌத்தமுறை பழக்க வழக்கங்களை தன்பால் ஈத்த்துக்கொண்டு கபளீகரம் செய்ய ஆரம்பித்தது. பௌத்த அடையாளங்களை தமதாக்கிக்கொள்ள அதில் சில இடைச்செருகல்கள், கட்டுக்கதைகள், அடையாளச் சிதைப்பு ஆகியவற்றை கொண்டுவந்து, மக்கள் அரசமரத்தடியில் அமர்ந்த குருவான புத்தரிடம் சென்று அறநெறிக்கருத்துக்கள, தம்ம போதனைகள் கேட்டு வந்த மக்களிடம், புத்தருக்குப்பின் அவரது நினைவைப் போற்றும் விதமான மரியாதையின் நிமித்தம் அரச மரமருகே சென்றுவந்த இடத்தில் புத்தரின் உருவம் பொறித்த சிலைகளை அழிக்க ஆரம்பித்திருக்கின்றனர். விகார் நாயகன் விநாயகன். அதாவது எங்களின் விகாரின் நாயகனான புத்தனே இங்கு விநாயகனாக்கப்பட்டார். இதன் இன்னொரு பெயர் பிள்ளையார் என்றழைக்கப்படுகிறது. திருச்சியில்கூட உச்சிப் பிள்ளை யார் கோவில் உள்ளது. அதன் உச்சியில் இருந்ததும் புத்தர்தான்.

திரி சரணம் பள்ளி திரிசரணப்பள்ளி, இப்பொழுது திருச்சிராப்பள்ளி என்று வழக்கானது. (திரிசரணங்கள் என்பது புத்தம், தம்மம், சங்கம் என்பதுதான்) இந்த மூன்று அறநெறிகளை போதித்த பள்ளி (பாலி சொல்) தான் அங்கு இருந்திருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்.

சீலம் என்றால் பாலி மொழியில் ஒழுக்கம் எனப்படும். பழைய சீலமே பின்னாளில் சேலமாகியுள்ளது. திருப்பதியிலுள்ள சாமிக்கு வேங்கடன் என்ற பெயருண்டு. திரு வேங்கட மலையான் திரி புத்தம், தம்ம, சங்கம் என்ற திரிரத்தினங்கள் திரு என்றாகி, வேங்கடம் என்றால் மலை, அதாவது தரிபீடகத்தின் மலையின் உச்சத்தை அடைந்தவன் ஆக இதுவும் பௌத்த பெயர்தான். பகவான் என்பதும் பாலிச் சொல் தான், அதன் பொருள் ஆசைகளை அருத் தெரிந்தவன் என்று வள்ளுவர் கூறிய ஆதி பகவன் புத்தரைத்தான் அதன் பொருள் ஆதி என்றால் முதல், பகவன் என்றால் பற்று அற்றவன் என்பதாகும்.

இன்று திருமணங்களில்கூட அரசங்கால் நடுவது வழக்கமாக உள்ளது. இதனை இந்துக்கள் பின்பற்றுவதால் அதனை மூடநம்பிக்கையாக நாமும் எதிர்க்கிறோம். ஆனால், அது நமது வழக்கமாக முன்பு இருந்துள்ளது. நமக்கெல்லாம் அறகருத்துகளை போதித்து நல்வழிப்படுத்திய புத்தரின் தலைமையின்பால் எங்களின் திருமணம் நிகழ்கிறது என்பதைக் குறிக்கும் மானசிக அன்பின், மரியாதையின், நன்றியுணர்வின் வெளிப்பாடுகளைக் குறிக்கும் செயல்கள்தான் என்பதை நாம் அனைவரும் உணர்தல் வேண்டும். வரலாறு மீண்டெழும், தம்மசக்கரம் சுழலும்!

*(2016இல் தோழர் Savitha Munuswamy அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து)*



# மரணப் படுக்கையில் அச்சு ஊடகங்கள்!

இந்திய அளவில் வருமானம் கொழிக்கும் முதல் 500 நிறுவனங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஜே.கே பேப்பர் என்ற நிறுவனம் மட்டுமே அச்சு ஊடகம் சார்ந்த ஒரே நிறுவனமாகும்.

அச்சு ஊடகத்தின் அடக்க விலையில் மிகுதியான பங்கு வகிக்கும் தாள் தயாரிப்பு நிறுவனமான இனைத் தவிர, பதிப்பகமோ, பத்திரிகைக் குழுமமோ ஒன்று கூட இந்தப் பட்டியலில் இடம் பெறவில்லை.

சமூகத்தின் வளமான பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பதிப்புத்துறையும், நாட்டின் 4வது தூணான இதழ்த் துறையும் இன்று இரங்கற்பா பாடும் நிலைக்குச் சரிந்துள்ள நிலையைக் கவலையோடு பதிவு செய்ய வேண்டியுள்ளது.

நாட்டின் 22 மொழிகளில் 10,000 பதிப்பகங்கள் நூல்களை வெளியிடுகின்றன. இதனை 20,000 விற்பனையாளர்கள் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றனர். இதில் பாதிக்கும் மேற்பட்ட நூல்கள் பாட நூல்களே. புத்தக விற்பனையாளர்களை நம்பி மூச்சுத் தினறிக்கெண்டிருக்கும் பதிப்பகங்களின் குரல் வளையை இந்த ஊரடங்கு மேலும் நெருக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் மட்டும் 25,000 அச்சகங்களும் அதை நம்பி ஏறத்தாழ 5 இலட்சம் குடும்பங்களும் உள்ளன. மொத்தமாகப் பதிப்புத் துறையும் சேர்ந்து ஏறத்தாழ 10 இலட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் இன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. முந்தைய அரசில், பதிப்பாளர் நலவாரியம் அமைக்கப்பட்டது. நூலகங்களுக்கு புத்தகம் அனுப்பும்போது பதிப்பாளர் நலவாரியத்திற்காக 2.5 விழுக்காடு பிடித்தம் செய்தனர். நெருக்கடி காலத்தில் கூடப் பாதிக்கப்பட்டவளர்களுக்கு வழங்கப்படவில்லை.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என மக்களிடமிருந்து பெறப்பட்ட வரிகளில் பத்து விழுக்காடு நூலக வரி வசூலிக்கப்படுகிறது. அனால், இந்த வரி பொது நூலகத்திற்கு முழுமையாகப் போய்ச் சேருவதில்லை. உள்ளாட்சித் துறையிலிருந்து சுமார் 250 கோடி நூலகத்துறைக்கு வரவேண்டியுள்ளது. நூலகத்துறையால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதிப்பாளர்களிடமிருந்து வாங்கப்பட்ட நூல்களுக்கு இன்னும் தொகை வழங்கப்படாமையால் அச்சுத்துறை தொடர்பான அனைவரும் வருமானமின்றித் தத்தளிக்கின்றனர். பதிப்பாளர்கள் பலரும் வட்டிக்குத் தொகை வாங்கிப் புத்தகங்கள் அனுப்பியவர்கள் ஆவர்.

இவை தவிர 2018, 19ஆண்டுகளில் நூலக ஆணையை நம்பி அச்சடிக்கப்பட்ட 15,000 நூல்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இனி நூல்களே அச்சடிக்க வேண்டாமென்ற முடிவுக்குப் பல பதிப்பகங்கள் தள்ளப்பட்டுள்ளன. அப்படி அடித்தாலும் தேவைக்

**முனைவர் ‘சுட்டி’ இ.ஜே.சுந்தர்**

கேற்ப அச்சிடும் (Print on demand) முறையில் நகலச்சாக 50 அல்லது 100 படிகள் அச்சிட்டால் போதும் என்ற நிலையில் பலரும் உள்ளனர். பதிப்பகங்களின் பாதிப்புக் குச் சிறிதும் குறையாமல் இதழ்களின் விற்பனை நாள்தோறும் கடுமையாகச் சரிந்து வருகிறது. மின் ஊடகங்களின் அளவற்ற வளர்ச்சியால் உலகெங்கும் இந்தப் பாதிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தொலைக்காட்சி செய்தி அலைவரிசைகள், நொடிக்கு நொடி பொழியும் இணையத் தகவல்கள், வாசிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி, நஞ்சாக ஏறிவரும் தாள் விலை, அச்சகச் செலவுகள், விளம்பர வருவாய் நலிவு முதலியன நாள்தோறும் விற்பனைச் சரிவை உலகெங்கும் நிகழ்த்தி வருகின்றன. அமெரிக்காவிலும் பரிட்டனிலும் பல அச்சு இதழ்கள் நிறுத்தப்பட்டு மின்இதழ்களாக அவை வெளிவரத் தொடங்கியுள்ளன. ஆஸ்திரேலியாவில் நிறுத்தப்படும் 100 அச்சு இதழ்களின் பட்டியல் அண்மையில் வெளிவந்துள்ளது.

இதழ்கள் பல கோடிகளை இழந்த நிலையில் ஒரே இரவில் பல பத்திரிகையாளர்கள் வேலை இழந்துள்ள னர். மிகுந்த ஊதியம் பெறும் அனுபவமிக்க ஊழியர் களை நீக்கி, குறைந்த ஊதியம் பெறும் அனுபவம் குறைந்தவர்களை இதழ்கள் வேலைக்கு அமர்த்தத் தொடங்கியுள்ளன. இதன் விளைவாக இதழ்களின் தரம் தாழ்ந்து மேலும் விற்பனை வீழ்கிறது.

உலகின் இரண்டாவது இதழ்ச் சந்தையைக் கொண்டிருக்கும் இந்தியாவில் 22 மொழிகளில் 1,05,443 இதழ்கள் (2016) பதிவு செய்யப்பட்டுள்ளன. பிற இந்திய இதழ்களின் விற்பனை வீழ்ச்சிக்கு முன்னரே இணையப் பயன்பாடு மிகுந்துள்ள தமிழகத்தில் இதழ்கள் வேகமாகச் சரியத் தொடங்கிவிட்டன. முதல் 20 இந்திய நாளிதழ்களில் தினத்தந்தி, 8ஆவது இடத்திலும் தினமலர் 20ஆவது இடத்திலுமே இடம் பெற்றுள்ளன. மேலும் சில நாளிதழ்களும், பருவ இதழ்களம் நீண்ட பாரம்பரியம் காரணமாகத் தங்கள் வீழ்ச்சியை வெளியே தெரிவிக்க அஞ்சி, திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் உள்ளன.

தரமாக வெளிவந்த இந்தியா டுடே இதழின் தமிழ், மலையாள, தெலுங்கு அச்சுப் பதிப்புகள் 20 ஆண்டு கால நட்டத்தை விழுங்கிக் கொண்டு கடைசியில் பிப்ரவரி 2015இல் தம் மூச்சை நிறுத்தின.

1926இல் தொடங்கிய ஆனந்த விகடன், தொடர் வளர்ச்சி பெற்ற அந்த நிறுவனத்தின் வாயிலாக அடுத்தடுத்து பல துறை இதழ்களை நடத்தினாலும், இன்று அதற்கும் சறுக்கல் தொடங்கி விட்டது. இதழ் விற்பனை சரிந்ததால், இணையத்தின்வழி செய்திகளை மணிக்கு மணி விகடன் வெளியிடுகிறது.

தன் நட்டத்தைச் சமாளிக்க முடியாமல், சுட்டி விகடன், விகடன் தடம், அவள், மணமகள், டாக்டர் விகடன் ஆகிய இதழ்களை அறவே நிறுத்திவிட்டது. விகடனில் பணிபுரிவது பாதுகாப்பானது என்று, ஊடகவுலகம் நம்பிக் கொண்டிருந்த நிலையில் 600 பேர் பணிபுரியும் இந்த நிருவாகதிலிருந்து திடீரென 176 பேரை, விகடன் வேலை நீக்கம் செய்து நிலைகுலைய வைத்துள்ளது. பாரம்பரியமிக்க கல்கி நிறுவனத்தின் சிறுவர் இதழான கோகுலமும் காலமாகிவிட்டது.

குமுதம் இதழ் தன் நிருவாகச் சிக்கல்களிடையே தன் விற்பனைச் சரிவைச் சரிக்கட்ட பல உத்திகளைக் கையாண்டு வருகிறது. முகக்கவசம், கையுறை இவற்றை, இதழோடு இலவசமாக அளித்து விற்பனையைத் தக்க வைக்க அரும்பாடுபட்டும், ஊழியர்களுக்கு முழுமையான ஊதியம் தர முடியாது தவிக்கிறது. எல்லா நாளிதழ்களும், பருவ இதழ்களும் இதே நிலையில்தான் மூச்சுத் திணறலுடன் வாழ்கின்றன.

கரோனா ஊரடங்கு, பதிப்பகங்கள் மற்றும் இதழ்களின் நலிவை மேலும் மோசமாக்கி, மரணப் படுக்கையில் தள்ளி வருகிறது. இந்த நிலை நீளுமா? இதற்குத் தீர்வு உண்டா? என்ற கேள்விகளை உலகெங்கும் ஊடகத்தினர் கேட்டு வருகின்றனர். உண்மை நிலை கசப்பானதாயினும் இந்நிலையைத் துணிவாக மாற்று வழியில் எதிர் கொண்டே ஆக வேண்டும்.

20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக மாற்றங்கள் நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் நிகழ்கின்றன. இந்த வேகம் இன்னும் மிகும் என்பதே எதிர்காலவி யலாளர்களின் கணிப்பாகும். 50 ஆண்டுகளுக்கு முன் மின்சாரமே பலர் அறியாத நிலையிலிருந்து இன்று அலாவுதீன் அற்புத விளக்கின் மறுபிறவியாக உருவெடுத்துள்ள திறன்பேசி (Smart Phone) வரை ஏற்பட்டுள்ள அதிவிரைவு மாற்றங்களை எண்ணிப் பார்த்தால், இந்த வேகம் புரியும். எனவே, எதிர்கால அதிர்ச்சிகளுக்கு நாம் தயாராவதே புத்திசாலித் தனமாகும்.

அச்சுத்தொழில் உருவாகிய 500 ஆண்டுகளில் பெரிய மாற்றமில்லையாயினும், அண்மையில் கணினி, அச்சுத் தொழிலைக் கையில் எடுத்தபின் மாய வேகத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன. அச்சுக்கோப்பு என்ற சோர்வுமிக்க நிலையிலிருந்து இன்று பேசினாலே எழுத்துகள் அச்சாகின்றன. மெய்ப்புத் திருத்தத்தைக் கணினியே நிகழ்த்துகிறது. அச்சிட்ட எழுத்துகளைப் பார்வையற்றோரும் கேட்கும் வண்ணம் கணினி படித்துக் காட்டுகிறது. உலகின் பல மொழிகளில் கணப்பொழுதில் மொழிபெயர்க்கிறது.

படிக்கும் பழக்கம் மறைந்து விட்டதே என்று நாம் கவலையுற வேண்டா. படிக்கும் முறைதான் மாறியிருக் கிறது. புத்தகம் படிப்பதுபோல அதைவிட வசதியாக, புத்தக வடிவில் கண்ணுக்கு இடையூறு இன்று

அமேசான் நிறுவனம் கிண்டில் என்ற மின்மடிப் பானை 2007ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தியது. 2011இல் அச்சிட்ப்பட்ட நூல்களைவிட மிகுந்த எண்ணிக்கையில் இந்நிறுவனம் மின் நூல்களை வெளியிட்டுள்ளது. இந்தக் கருவியில் பத்தாயிரம் நூல்கள் வரை சேமிக்கலாம் என்பதால், ஒரு நூலகத்தையே இதற்குள் உருவாக்கலாம். கிண்டில் வழி, இதுவரை 34 மொழிகளில் 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிறுவனம் தமிழில் நூல்களை வெளியிட முன்வந்த சில மாதங்களிலேயே 1000க்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றைக் கிண்டில் என்ற மின்மடிப்பானில் மட்டுமின்றி, திறன்பேசி, கணினி முதலிய எந்த மின்கருவிகள் வாயிலாகவும் படிக்கலாம், பகிரலாம். உலகெங்கம் விற்பனைக்குக் கொண்டு செல்லலாம். அச்சு நூலைப்போல விற்பனையாளர் களைத் தேடி அலைவதும், அவர்களால் இழுத்தடிக் கப்படுவதும், அச்சுப்படிகளைப் பாதுகாக்க இடம் தேடுவதும், காப்பாற்றுவதும் இனிப் பழங்கதையாகி விடும்.

பதிப்புலகின் மெக்கா என்று கருதப்படும் பிராங்க் பேர்ட் புத்தகத் திருவிழா இவ்வாண்டு நடை பெறுவதையொட்டி அதன் ஒருங்கிணைப்பாளர் ஜூர்கன்பூஸ் “இனி கண்டம் விட்டுக் கண்டம் வந்து இதில் கலந்து கொள்ளதீர்கள். ஒலி, ஒளி ஊடகங்களை நாம் சரிவரக் கையாண்டால் ஒரு புதிய உலகைத் திறக்கும் சாத்தியங்கள் மிகுதியாகும்” என்று கூறியுள் ளதை நம் புத்தக காட்சிகளும், வெளியீட்டா ளர்களும் இனி பின்பற்றலாம்.

அனைத்து இதழ்களும் இணையப் பதிப்புகளை வெளியிடத் தொடங்கிவிட்டன. செய்தித்தாள் இயற்கையை அழிக்கிறது என்கின்றனர் சூழலியலா ளர்கள். அமெரிக்காவில் அச்சிடப்படும் ஞாயிறு இதழ்களின் தாள் தேவைக்காக மட்டும், வாரத்தில் ஐந்து இலட்சம் மரங்கள் வெட்டப்படுகின்றன. மின்நூலை விட அச்சு நூல்கள் 3 மடங்கு மூலப் பொருட்களையும் 78 மடங்கு நீரையும் பயன்படுத்து கின்றன. அரசுகள் தாளில்லாச் செயல்பாடுகளைத் தீவிரமாக்கத் தொடங்கிவிட்டன. எனவே, விரைவில் அச்சு ஊடகங்கள் மறைந்து தாளில்லா நூல்களும் இதழ்களுமே எங்கும் காணப்படும் நிலை தவிர்க்க முடியாததாகும்.

அச்சு ஊடகம், ஒலி ஊடகம், காட்சி ஊடகம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட அற்புதம் இணையமாகும். தமிழில் வந்த படைப்புகள் அனைத் தும் 2000க்கும் மேற்பட்ட இணைய தளங்கள் வழி வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது. கறையானுக்கு இரையாகாது. கொள்ளத்தான் குறையாது வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கோடிக் கணக்கான செய்திகள் நம் விரலால் தட்டினால் வெளி வரத் துடிக்கின்றன. இணையத்தையும் உள்வாங்கித் திறன்பேசி வாமன அவதாரத்தில் விசுவரூபம் எடுத் துள்ளது.

இந்த மாபெரும் வசதியைப் பயன்படுத்தத் தெரியா மலும், விரும்பாமலும், கற்கத் தயங்கியும் தமிழறிஞர்கள் உட்பட பலரும் விளங்குவது வருத்தத்தற்குரியதே. யாப்பிலக்கணம் கற்பதை விட இதனைக் கற்பது பலமடங்கு எளிதானது. ஒற்றுப்பிழைகளை நீக்கும் முறைகளை மனதில் ஏற்றுவதைவிட இதன் செயல் பாடுகள் ஒன்றும் கடினமில்லை. இதனைக் குழந்தை களிடம் வெட்கப்படாமல் பெரியவர்கள் கற்றுக் கொள்வதில் தவறில்லை.

இதழியல் குரு எனப் புகழப்படும் பில்ப் மேயர் என்பாரின் ஆய்வு முடிவின்படி ஏப்ரல், 2043க்குள் அச்சு ஊடகங்கள் 100விழுக்காடு மறைந்துவிடும். இது மிகுதியான காலக்கெடு. கொரோனா போன்ற பேரிடர் நிகழ்வுகள் அச்சு ஊடகங்களின் மறைவை இன்னு விரைவு படுத்தும் என்றே எதிர்பார்க்கின்றனர்.

நாடகத்தால் கூத்தும், திரைப்படத்தால் நாடகமும், தொலைக்காட்சியால் திரைப்படமும் அழிந்தது போல, இணையத்தால் அச்சு ஊடகங்கள் உட்பட பலவும் மறைவதும், புதியவை மலர்வதும் இயற்கை நியதியாகும்.

மின்னஞ்சல் :
ejsundar@gmail.com



## விநாயகருக்கு 16 மனைவிகள்?

அபிதான சிந்தாமணி 1910இல் வெளிவந்த அந்தக்கால தமிழ் கலைக்களஞ்சியம் – என்சைக்ளோபீடியா. அதிலிருக் கும் ஒரு செய்தி.

விநாயகருக்கு சித்தி, புத்தி, வல்லபை, விஷ்ணு மூர்த்தியின் குமாரியாகிய மோதை, சுமகை, சந்தரி, மனோ ரமை, மங்கலை, கேசனி, காந்தை, சாரு ஹாசை, சுமத்திமை, நந்தினி, காமதை ஆகியோர் மனைவிகள் என்று எழுதப்பட் டிருக்கிறது. விநாயகருக்கு பதினாறு பெண்டாட்டிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அபிதான சிந்தாமணி : பக்கம் 1751.



# வேலைக்கான புதிய அனைத்திந்தியத் தேர்வு தமிழ்நாட்டு மாணவர்களைக் கழித்துக் கட்டும்!

பெ. மணியரசன்

பொழுது விடிந்தால் புதிய குண்டு ஒன்றை மக்கள் உரிமைகளின் மீது வீசுவது மோடி அரசின் கொரோனாக் காலக் கொள்கையாகிவிட்டது. அவ்வாறு 19.08.2020 அன்று புதிய சுமையாக - வேலைக்கான அனைத்திந்திய நுழைவுத் தேர்வை அறிவித்துள்ளது.

முதற்கட்டமாகத் தொடர்வண்டித் துறை, வங்கித் துறை, நடுவண் அரசின் பணியாளர் தேர்வுத் துறை ஆகிய மூன்றுக்குமான ஊழியர் வேலைக்கு இந்திய அரசு அனைத்திந்திய முதல்நிலைத் தேர்வு முறையை அறிவித் துள்ளது.

“தேசியப் பணிசேர்ப்பு முகமை (NRA)” என்ற இந்த அமைப்பு மேற்கண்ட மூன்று துறைகளில் வேலைக்குச் சேர்வதற்கான முதல்நிலைத் தேர்வு நடத்தும். இதில் வெற்றி பெறுவோர் மட்டுமே மேற்படி மூன்று துறை களும் தனித்தனியே நடத்தும் பணியாளர் வேலைக் கான தேர்வுகளை எழுத முடியும். இந்த இரண்டாம் நிலைத் தேர்வில் வெற்றி பெறுவோர் மட்டுமே வேலைக்கு எடுக் கப்படுவர்.

இந்த முதல்நிலைத் தேர்வு, இந்திய அரசின் எல்லாத் துறைகளின் பணி சேர்ப்பிற்கும் மாநில அரசுகளின் பணி சேர்ப்பிற்கும் தனியார் துறைப் பணிகளுக்கும் பின்னர் விரிவுபடுத்தப்படும் என்றும் மோடி அரசின் அமைச் சரவை முடிவு செய்துள்ளது. இந்த முதல்நிலைத் தேர்வில் முதலில் தோல்வியுறுவோர் தொடர்ந்து மூன்று ஆண்டு களுக்குத் திரும்பத் திரும்ப எழுதலாம் என்கிறது இதன் விதிமுறை!

ஒரு வேலைக்கு ஒரு தடவைத் தேர்வெழுதிய மாணவர்களை - இப்போது இரு தடவை தேர்வெழுதும் படி செய்துள்ளது மோடி அரசு! ஆனால், தேர்வை எளிமைப்படுத்தி, மாணவர்களுக்கு உதவும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை அறிவித்துள்ளது என்று நடுவண் அமைச்சர் ஜவடேகர் செய்தியாளர்களிடம் நேர்காணல் கொடுத்தார். இட்லரின் கோயபல்சு நினை வுக்கு வருகிறார்.

கூடுதலாகச் சுமத்தப்பட்டுள்ள இந்தப் புதிய அனைத் திந்தியத் தேர்வு, ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப் பட்ட - கிராமப்புற மாணவர்களை வடிகட்டிக் கழித்துக் கட்டு வதற்கான ஏற்பாடு என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்!

இந்தப் புதிய அனைத்திந்திய நுழைவுத் தேர்வு இந்திய அரசின் நடுவண் கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ.) மற்றும் என்.சி.இ.ஆர்.ட்டி. (NCERT) பாடத் திட்ட அடிப் படையில் நடத்தப்படும். தமிழ்நாடு அரசின் பாடத் திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு இந்த வினாத் தாள்கள் இவர்களின் பாட வரம்புக்கு வெளியே உள்ள வையாக இருக்கும். எனவே, தமிழ்நாட்டு மாணவர்கள் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகள் இந்த வழியிலும் உண்டு.

இப்போது, இந்திய அரசு நிறுவனங்கள் நடத்துகின்ற வேலைக்கான அனைத்திந்தியத் தேர்வுகளில் மண்ணின் மக்களாகிய தமிழர்கள் எந்த அளவு புறக்கணிக்கப்படுகி றார்கள் என்பதையும், இந்திக்காரர்களும் மற்ற வெளி மாநிலத்தவர்களும் இத்தேர்வுகளில் சற்றொப்ப 95 விழுக் காட்டிற்கு மேல் தேர்வு செய்யப்படுவதையும் ஏற் கெனவே நாமறிவோம்.

புதிய அனைத்திந்திய முதல்நிலை நுழைவுத் தேர்வு வந்துவிட்டால், அந்தந்தத் துறைகள் நடத்தும் தேர்வெழு தும் தகுதியைக் கூடத் தமிழர்கள் பெற முடியாமல் வடி கட்டப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி.

அடுத்து, மேற்படி நுழைவுத் தேர்வில் வெற்றி பெறும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாட்டுத் தனியார் நிறுவனங்கள் ஆகியவற் றின் பணிகளுக்கான தேர்வெழுத தாராளமாக வரு வார்கள்! தமிழ்நாட்டின் மாநில அரசு மற்றும் தனியார் துறைப்பணிகளும் வடவர்களுக்கே அளிக்கப்படும். தமிழ் நாட்டின் இளையோர் அகதிகளாக அலையும் அவலம் உருவாகும்!

தமிழ்நாட்டு இளையோர்க்கு வேலை மற்றும் மேல் படிப்பு படிக்க வாய்ப்புளைப் பறிப்பது மட்டுமின்றி, அவர்களின் உயிரையும் பறிக்கும் அவலம் ஏற்கெனவே அனைத்திந்திய “நீட்” தேர்வால் நடந்து கொண்டுள்ளது. அண்மையில் கோவையில் சுபஸ்ரீ என்ற மாணவி “நீட்” தேர்வு அச்சத்தால் தற்கொலை செய்து கொண்டார் என்பது அபாய எச்சரிக்கை!

ஒவ்வொரு உரிமைப் பறிப்பிற்கும் தனித்தனியே கண்டனம் தெரிவித்து, அடையாள ஆர்ப்பாட்டம் நடத்தி ஓய்ந்து போவதில் பயன் இல்லை. ஒட்டுமொத்தமாக மோடி அரசு, நமது அனைத்து உரிமைகளையும் பறிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு, மக்கள் குறிப்பாக இளையோர் ஒன்று திரள வேண்டும். மண்ணின் மக்கள் உரிமை மீட்பிற்கான மாபெரும் மக்கள் திரள் அறப்போர் எழுச்சிக்கு அனைவரும் அணியமாக வேண்டும்!

தமிழ்த்தேசியத்தமிழர் கண்ணோட்டம் (செப் - 2020)

# “தமிழ்நாட்டு வேலைகள் தமிழர்களுக்கே”

## பொன்மலை தொடர்வண்டித் தொழிற்சாலையில்

## ஒரு வாரம் தொடர் மறியல்!




## தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு தீர்மானம்!

தொடர்வண்டித்துறையில் திட்டமிட்டு மண்ணின் மக்களாகிய தமிழர்கள் வேலை மறுக்கப்பட்டு, புறக் கணிக்கப்படுகிறார்கள். இதேபோன்ற தமிழினப் புறக் கணிப்பு நடுவண் அரசின் மற்ற துறைகளிலும் அன்றாடம் அரங்கேறிக் கொண்டுள்ளது. மேலே சுட்டிக் காட்டப் பட்டுள்ள - தமிழ்நாட்டின் நடுவண் அரசு நிறுவனங்களில் 90 விழுக்காட்டிற்கு மேல் வடமாநிலத்த வரையும் பிற மாநிலத்தவரையும் வேலையில் சேர்க் கிறார்கள்.

இது தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை உரிமைப் பறிப்பு, வாழ்வுரிமைப் பறிப்பு மட்டுமல்ல - தொலை நோக்கில் தமிழர் தாயக உரிமையைப் பறிக்கும் இன ஒதுக்கல் கொள்கையாகும்.

இவற்றின் அடுத்தகட்டமாக, தமிழ்த்தேசியப் பேரியக்கம் பொன்மலை தொடர்வண்டித்துறை தொழிற் சாலை வாயிலில் 11.09.2020 முதல் 18.09.2020 வரை காலை 10 மணிக்கு - ஒவ்வொரு நாளும் ஓர் அணி என்ற நிலை யில் தொடர் மறியல் போராட்டம் நடத்த விருக்கிறது!

### கோரிக்கைகள்

1. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலுள்ள இந்திய அரசு நிறுவனங்கள் அனைத்திலும் 90 விழுக்காடு வேலை தமிழர்களுக்கே வழங்க வேண்டும்! 10 விழுக்காட்டிற்கு மேலுள்ள வெளி மாநிலத்தவர் அனைவரையும் வெளியேற்ற வேண்டும்!

2. தொடர்வண்டித்துறையின் தென் மண்டலப் பணிகளுக்கான தேர்வுகளையோ, நேர்காணல் களையோ அனைத்திந்திய அளவில் நடத்தக்கூடாது. தென்னகத் தொடர் வண்டித் துறையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காலங் காலமாக வசித்து வரும் மக்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும், கலந்து கொள்ள முடியும் என்று வரம்பு விதிக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள இதர இந்திய நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் அனைத்திற்குமான வேலைத் தேர்விற்கும், நேர்காணலுக்கும் தமிழ்நாட்டில் காலங் காலமாக வசித்து வரும் மக்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்ற நிபந்தனையை விதிக்க வேண்டும்.

3. அண்மையில் தென்னகத் தொடர்வண்டித்துறை யில் உதவி ஓட்டுநர் (அசிஸ்டெண்ட் லோக்கோ பைலட்) மற்றும் தொழில்நுட்பப் பணியாளர் (டெக்னீசியன்) பணிகளுக்குத் தேர்வு செய்த 3,218 பேரில் 10 விழுக் காட்டினருக்கு மேலுள்ள வெளி மாநிலத்தவர் பணிகளை இரத்து செய்து, அந்த இடங்களுக்கு ஏற்கெனவே தேர்வெழுதியுள்ள தமிழர்களை மதிப்பெண் அடிப்படையில் பணியமர்த்த வேண்டும்.

தென்னகத் தொடர்வண்டித் துறையில் பழகுநராக (ஆக்ட் அப்ரண்டிஸ்) பயிற்சி முடித்த தமிழர்களுக்கு, பணிய மர்த்தத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும். அவர்களை வடிகட்டும் முறையில் நடத்தப்படும் ஓட்டப்பந்தயம் போன்ற உடல் தகுதித் தேர்வை இரத்து செய்ய வேண்டும்.

4. மண்ணின் மக்களுக்கு வேலையை உறுதி செய்யும் சட்டங்கள் கர்நாடகம், மகாராட்டிரம், குசராத், ஆந்திரம், மத்தியப்பிரதேசம் போன்ற பல மாநிலங்களில் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மண்ணின் மக்கள் வேலைக்கு உறுதியளிக்கும் சட்டத்தைத் தமிழ்நாடு அரசு உடனடியாக இயற்ற வேண்டும்! இச்சட்டம் நடுவண் அரசு மற்றும் தனியார் துறை வேலைகளில் 90 விழுக்காடு வேலையும், தமிழ்நாடு அரசுத் துறையில் 100 விழுக்காடு வேலையும் தமிழர்களுக்கே என விதிமுறை வகுக்க வேண்டும்!

*நன்றி : தமிழ்த்தேசியத் தமிழர்கண்ணோட்டம்*

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# மரைக்காடன் கவிதைகள்

## சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

மாலவன் குன்றத்தை
உடைக்கவும் செய்யலாம்

வேலவன் குன்றத்தை
நொறுக்கவும் செய்யலாம்

டெல்லியின்
அனுமதி போதும்

ஆன்மீகம் என்பதெல்லாம்
ஆரியக் கடவுளுக்கு மட்டும்

## ஒரே நாடு ஒரே படையல்

பஞ்சாமிருதத்தையும் லட்டையும்
அப்புறப்படுத்துங்கள்

பானிபூரியை மட்டும்
அமல்படுத்துங்கள்

இனி
ஒரே நாடு
ஒரே படையல்

## தகுதித் தேர்வு

இசையால் வெல்ல முடியாது
ஏ.ஆர். இரகுமானை

என்ன செய்யலாம் ?
இந்திப்பட உலகம் சிந்திக்கிறது

வதந்தி பரப்பி
வாய்ப்புகளை தடுக்கலாம்

இப்படியான உத்திகளால் நிறைந்தவை
இந்திய தகுதித் தேர்வுகள்

## சமூகநீதி பாதுகாப்பு

பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை
பின்பற்ற முடியாது

உயர்சாதி இட ஒதுக்கீடு
அமலாக்கத்தை
உங்களால்
ஒன்றும் செய்ய முடியாது

கல்லறையைச் சுற்றி
காவல்
கடுங்காவல்

எந்திரத் துப்பாக்கி
இரண்டடுக்கு பாதுகாப்பு
இரவும் பகலுமாய் கரசேவகர்கள்

சவக்குழிக்குள்
கிடத்தப்பட்டிருக்கிறது
சமூகநீதி

வருணாசிரம சட்டத்தை
வரிவரியாய் படித்துப்பார்த்த
நீதிபதி

உயிருடன்
புதைக்கப்பட்டதற்கு
உரிய ஆதாரங்கள்
இல்லையென
உச்ச நீதிமன்றத்தில்
தள்ளுபடி செய்தார் வழக்கை!

•

நன்றி :
தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம்



MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

